தஞ்சை எண் 7436

முரசொலி சிறப்பிதழ்

சென்னை

முரசொலி அண்ணா மலர்

1964





என்ன லாவகம்...?

அண்ணா எழுதினால்....!



"என்னுடைய பிறந்த நாள்விழாவைத் தாயகமெங்கணும் கொண்டாடுகின்ற அருமைத் தம்பிமார்களே! எழிலார் தோரணங்களும் ஏற்ற மிகு இருவண்ணக் கொடிகளும் முகிலைத்தொடுமளவுக்குக்கட்டிக்களிப்படையும்என்அன்புஇள வல்களே! தொகை தொகையாய்க் கூடி நின்று வாழ்த்துரைக் கும் பாசமுள்ள சகோதரர்களே! என் பிறந்த நாள் விழாவைத் தொழிலாளர் நாள் என்றும், தமிழ்ப்பாதுகாப்பு நாள் என்றும், இந்தி எதிர்ப்பு நாள் என்றும் நகராட்சி தினம்— மகளிர் தினம்—மாணவர் தினம்—என்றும் வகுத்துக்கொண்டு இந்தக் கிழமையையே உணர்ச்சி கொள் கிழமையாக மாற்றிய மைத்திருக்கிறீர்கள். அது கண்டு மகிழ்ச்சி அடைகின்றேன். லட்சக்கணக்கான வாழ்த்துத் தந்திகளும், வாழ்த்துக் கடிதங் களும் டெல்லியில் இருக்கும் என்னைத் திணற அடித்து விட்டன தம்பி; அது கண்டு நீ என்னிடம் கொண்டிருக்கிற பாச உணர்ச்சியை எண்ணி எண்ணிப் பெருமை கொள்கி றேன். ஆனாலும் என் செல்லத் தம்பிகளே! இத்தனை பூரிப்பும் புளகாங்கிதமும், நீங்கள் என் பிறந்த நாள் விழாவைப் பட்டி னம் முதல் பட்டி தொட்டிகள் வரையில் கொண்டாடு கிறீர்கள் என்பதால் ஏற்பட்டதல்ல! இந்த நாளில் எனக் கேற்படும் இன்ப மெல்லாம் சமுதாய மறுமலர்ச்சி காணவும், பொருளாதாரத் துறையில் சமத்துவம் செழிக்கச் செய்யவும், அரசியலில் உண்மையான ஜனநாயகம் செயல்படவும் பணி யாற்றி வருகின்ற இந்த இயக்கம் மக்கள் நெஞ்சத்தில் அழியாத இடம் பெற்று நாள்தொறும் நாள்தொறும் தழைத்துப் பூத்துக் குலுங்கும் தன்மை பெற்று வருகிறதே என்பதை நினைத்து மகிழ்வதால் ஏற்படுவதேயாகும் என் பதை நீங்கள் அறிவீர்கள். என் தம்பியிடமிருந்து "அண்ணா வாழ்க!" என்ற ஒலியை விட; "அண்ணா! இன்று ஒரு புதிய கிளை!" என்ற செய்தியை நான் எத்தனை இன்ப உணர்வுடன் சுவைக் கின்றேன் தெரியுமா?

"ஜனநாயகத்தை மலரச் செய்யக் கூடியவர்கள்—இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடக் கூடிய தியாக மறவர்கள்

முரசொலி அண்ணா மலர்

1964

உண்மைச் சமதர்மவாதிகள்—என்ற நம்பிக்கையோடு மக்கள் அணி நம் பக்கம் வந்து கொண்டிருப்பதற்கு முன் அறிவுப் புக்கள் தான் திருச்செங்கோடும், திருவண்ணாமலையும் சென்னை மாநகராட்சியும், பத்து நகராட்சி மன்றங்களும் என்பதை நாடறியும். நல்லவர் அறிவர். அழுத்தமான கொள்கைகள் கொண்டவர்கள் மட்டுமல்ல; அப்பழுக்கற்ற நிர்வாகத் திறமை கொண்டவர்கள் என்ற கீர்த்தியையும் கழகம் பெறுகிற போது பிறந்த நாள் விழா மகிழ்ச்சி ஆயிரம் மடங்காகப் பெருகும் எனக்கு என்பதை அனைவரும் உணர்வீர்கள். இத்தனை மகிழ்ச்சிக்கிடையே நான் விடுகின்ற சோகப் பெருமூச்சுக்களும் ஏராளம்; ஏராளம்! தமிழ்காக்கத் தடந்தோள் உயர்த்திக் களம் புகுந்திட்ட கழகக் கண்மணிகள் பலர் ஓராண்டு, ஆறுமாதம், மூன்று திங்கள் எனத் தண்டனை பெற்று சிறைக் கோட்டங்களில் வாடுகின்றனர். அவர் தம்குடும்பத்தினருக்கு எத்தனை அல்லல்கள்! எத்தனை இன்னல்கள்! இந்த நாளில் அவர்களை யெல்லாம் வாழ்த்துங்கள்! அந்தத் தியாகச் சுடர்களுக்கு வணக்கம் செலுத்துங்கள்! தமிழ்காக்க அவர்கள் கொண்ட உணர்ச்சியை அனைவரும் பெறுங்கள்!

"என் பிறந்த நாள் செய்தியாக இதைத் தவிர வேறு எதுவும் கூறுவதற்கில்லை!"

தன்னுடைய பிறந்த நாள் விழாக் கொண்டாடுகின்ற நேரத்தில் டெல்லியில் இருக்கும் அண்ணா அவர்கள் என்ன எண்ணிக் கொண்டிருப்பார் என்று சிந்தித்தேன். அவர் எண்ணுவதை மேலே தீட்டிக் காட்டியுள்ளேன். ஆமாம்; இப்படித்தான் அவர் எண்ணுவார் எழுதுவார் என்று நீங்களும் கூறுவது என் காதில் விழுகிறது.

கழகம் வளர்வது கண்டு அவர் மகிழ்ச்சிக் கடலில் திளைக்கிறார்.

கண்யம் தவறினால் ஒரு தம்பி எனக் கேள்விப் பட்டால் போதும் அவர் துடிதுடிப்பார்!

கட்டுப்பாட்டைக் குலைக்க ஒரு தம்பி முயற்சித்தான் என உணர்ந்தால் போதும் அவர் மனம் எரிமலையாகி விடும்!

கடமையைச் செய்திடத் தயங்கினான் ஒரு தம்பி என அறிந்தால் போதும்; அவர் குமுறுங் கடலாகி விடுவார்! ஊழலின் தலைவாசலைத் தூர நின்று எட்டிப் பார்த்தான் ஒரு தம்பி எனக் கேள்வியுற்றால் போதும் அண்ணன் அடியற்ற நெடுமரமாவார்!


நாம் ஏற்றிய கொடிகள் கண்டு அவர் மகிழ்வதை விட, நாம் இயற்றும் சிறு தவறுகள் கண்டு அவர் குமுறும் அளவே அதிகமாகி விடக்கூடியது என்பதை அவர் உள்ளம் உணர்ந்தவர்கள் புரிந்து கொள்வர்.

அந்தத் தூய தலைவனின்
உள்ளத்திற்கு ஊக்கமும்
உற்சாகமும் தொடர்ந்து
அளிக்கும் முறையில்
மேலும் நம்மை வலுப்
படுத்திக் கொள்வது
தான் இந்த இனிய
விழாநாளில் நாம் எடுத்
துக் கொள்ளும் உறுதியாக
இருக்க வேண்டும்

அன்பழகன்

SECRETARY TO THE PRESIDENT OF INDIA,
RASHTRAPATI BHAVAN,
NEW DELHI-4.

No.F.9(3)-G/64.




7—9—64

அன்புள்ள ஐயா !

திரு. சி. என். அண்ணாதுரை அவர்களுக்கு அவரது ஐம்பத்தாறாவது பிறந்த நாளில், குடியரசுத் தலைவர் தமது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறார்.

தங்கள் நம்பிக்கையுள்ள,
எஸ். டட்.
(குடியரசுத் தலைவரின் செயலாளர்)



அன்புள்ள திரு. கருணாநிதி,

முதல் தேதியிட்ட தங்கள் கடிதத்திற்கு மிகவும் நன்றி.


திரு சி.என். அண்ணாத்துரை அவர்களின் 56-வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு 'முரசொலி' சிறப்பு இதழ் கொண்டு வருவதை அறிந்து மகிழ்கிறேன். இதழ் வெற்றிபெற விழைகிறேன்.

திரு. அண்ணாத்துரை அவர்கள் பல பல ஆண்டுகள் வாழ்ந்து அவரது நாட்டிற்கு தொண்டாற்ற வேண்டும் என்பதே என்னுடைய நம்பிக்கையும்—பிரார்த்தனையும் ஆகும்.

தங்கள் உண்மையுள்ள,

ஜாகிர் உசைன்

சுத்தமான உள்ளம்




எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாயினும், எந்தக் கட்சியையும் சேராதவர்களாயினும் எல்லாத் தமிழருக்கும் ஆங்கிலத்தைத் தள்ளிவிட்டு ஹிந்தியை அகில இந்திய சர்க்கார் பாஷையாக அமைப்பது பட்சபாதம் ஆகும். தேசத்தை பாதிக்கும் என்பது அபிப்பிராயம். ஆங்கிலத்தை எந்தக் காலத்திலும் அகற்றலாகாது. அகற்றினால் தேசத்தின் ஒற்றுமை குலையும்.

இந்த அபிப்பிராயத்தைக் கொண்டு நான் போராடி வருவது அனைவருக்கும் தெரியும். இந்தப் பணி என்னையும் தி. மு. க. தலைவர் அண்ணாத்துரை அவர்களையும் நண்பர்களாக்கி விட்டது. அண்ணாத்துரை அவர்கள் நெஞ்சம் சுத்தமான நெஞ்சம். சுத்தமான உள்ளமே தற்போது தேசத்திற்கு முதலாவதான அவசியம்.

அண்ணாத்துரை அவர்களை அனைவரும் வாழ்த்துவோமாக!

இப்படிக்கு




சபாநாயகர் வாழ்த்து

எஸ். செல்லபாண்டியன்,
பி.ஏ., பி.எல்

அன்புடையீர்,

அறிஞர் அண்ணு அவர்களுடைய 56வது பிறந்த நாள் விழா சிறப்புடன் கொண்டாடப்படுவது மிகவும் பொருத்தமானதே. அவர் நீடுழி வாழ்ந்து நாட்டிற்கு நல்ல தொண்டாற்ற வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

தங்கள்,
எஸ். செல்லபாண்டியன்



திரு. மு. கருணாநிதி,
ஆசிரியர், முரசொலி,
சென்னை.

திரு. சி. என். அண்ணாத்துரை அவர்களுக்கு 56-வது பிறந்த நாள் விழா நடப்பதறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். நண்பர் அண்ணாத்துரை, தமிழக அரசியலில் பிரதான எதிர்க் கட்சியின் பெருந்தலைவராக விளங்குகின்றார்; அந்தவரையில், அவருடைய பிறந்த நாள் விழா மற்ற அரசியல் கட்சிகளின் கவனத்தையும் கவரத் தக்கதாகும்.

ஆளுங் கட்சிக்கும் எதிர்க் கட்சிக்குமிடையே, கருத்துப் போர் நடப்பது தவிர்க்க முடியாததாகும். ஜனநாயக வளர்ச்சிக்கு அது தேவையானதுங்கூட! அதுபோல, அந்த இரண்டு கட்சிகளும் பரஸ்பரம் ஒன்றை யொன்று கவரவித்துக்கொள்ளவும்கூடமைப்பட்டிருக்கின்றன. அது அரசியல் நாகரிகமும்கூட. ஆனால், இன்றைய தமிழகத்தில் அந்த நாகரிகம் வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. நாம் ஜனநாயக அரசியலில் ஆரம்ப கட்டத்திலிருக்கிறோம். இரு நூற்றாண்டு அடிமைத்தனத்தின் கேடுகளிலிருந்து நாம் இன்னமும் விடுபடவில்லை. ஆகவே, ஆளுங் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்குமிடையே நல்ல உறவு இருக்கவில்லை,

அன்பர் அண்ணாத்துரையின் பிறந்த நாள் விழாவோ, ஆளுங் கட்சித் தலைவரின் பிறந்த நாள் விழாவோ, கட்சிகளிடையே ஒருமைப்பாடு நிலவப்பயன்படவில்லை. என்னைப் பொறுத்தவரை ஆளுங்கட்சிக்கும் எதிர்க்கட்சிக்குமிடையே "ஒத்துழையாமை"யும் "ஒத்துழைப்பும்" ஏககாலத்தில் நிகழ்வதையே விரும்புகிறேன். அந்த நாள் விரைவில் வருமென்றும் நம்புகின்றேன்.

நானும் நண்பர் அண்ணாத்துரையும் நெடுநாளைய நண்பர்கள். சுமார் முப்பதாண்டுகட்கு முன்பு நானும் அவரும் முதன் முதலாக சந்தித்தோம். அது முதல் நாங்கள் நண்பர்களாகவே இருக்கிறோம், எங்கள் வாழ்வில், நாங்கள் ஒரே கட்சியில் எந்த நாளிலுமே இருந்தோமில்லை. இரு வேறு கட்சிகளில் இருந்து வந்திருக்கிறோம் என்பது மட்டுமல்ல; ஒன்றுக்கொன்று விரோதமான கட்சிகளிலும் இருந்திருக்கி



றோம். அப்போதுகூட, நாங்கள் தமிழ் மொழியின் வளர்ச்சி, தமிழினத்தின் வாழ்வு, தமிழ் நாட்டின் நலன் ஆகியவற்றில் ஒத்த கருத்துடையவர்களாகவே இருந்து வந்திருக்கிறோம் அந்த நிலை - தனித்தனியே நாங்கள் தலைமை தாங்கி கட்சி நடத்தும் இன்றும் நீடிக்கிறது.

தமிழ் மொழி பாமரர்களுக்கு எட்டாக் கனியாக இருந்ததுஒரு காலத்தில்நண்பர் அண்ணாத்துரை, தமது பேச்சாலும் எழுத்தாலும் பண்டிதத் தமிழுக்கும் பாமரர் தமிழுக்குமிடையே ஒரு உறவை ஏற்படுத்தினார்.

மக்களுக்கும் இலக்கியத்திற்குமிடையே நிலவிய இடை வெளியைக் குறைத்தார். அதன் விளைவாக, புதிய புதிய எழுத்தாளர்களை-பேச்சாளர்களைத் தோற்றுவித்த பெருமைக்கு உரியவரானார். தமிழ் மொழியின் வளர்ச்சியில் நாட்டமுடைய எவரும் இதனை மறுக்க மாட்டார். இது சாதாரண பணியன்று. தமிழ் மொழியில் அவர் ஏற்படுத்திய மகத்தான மறுமலர்ச்சியாகும். அதற்காகவும் அவருடைய பிறந்த நாளைக் கொண்டாடி அவருக்கு வாழ்த்து கூற தமிழர் அனைவருமே கடமைப் பட்டிருக்கின்றனர்.


நாங்கள், எவ்வளவோ கருத்து வேற்றுமைகளுக்கிடையே இதுகாறும் நண்பர்களாக இருந்து வந்தது போல, இனியும் இருப்போம் என்றே நம்புகின்றோம். எங்களுக்கிடையே இருந்துவரும் கருத்து வேற்றுமைகள் எண்ணிக்கையில் குறைந்து வரவும் காண்கின்றேன். அதனாலும், எங்கள் நட்பு இன்னமும் நெருக்கமாகின்றது.

அந்த, மறுமலர்ச்சி பெற்றுவரும் நட்பு வளர, நண்பர் அண்ணாதுரை ஒரு நூற்றாண்டுக்கு மேலும் வாழ காலம் கைகொடுக்குமென்பது உறுதி.

நண்பர் அண்ணாதுரை, நல்ல உடல் நலம் பெற்று, தமிழுக்கும், தமிழினத்துக்கும், பாரத நாட்டுக்கும் பணிபுரிய ஒரு நூற்றாண்டுகளுக்கு மேலும் வளர வாழ்த்துகின்றேன்.

இங்ஙனம்,

ம. பொ. சிவஞானம்.


மிகச் சிறந்த
பேச்சாளர்
மிகச் சிறந்த
அறிவாளர்
ரைட் ஆனரபிள் சீனிவாச சாஸ்திரி
தமிழுக்குத் தொண்டு செய்து சிறைக்குச் சென்றேன்
சீலசிறந்த பேச்சு வல்லோன், தமிழன், வீரன்
தமர் என்றும் தான் என்றும் நினைப்பதன்றி
தமிழ்நாட்டின் நலந்தனுக்கே உயிர் உடல்கள்
அமைக்க எனி இரவு பகல் உழைக்கும் மேலோன்
-பாரதிதாசன்
அண்ணதுரை கலையறிந்
தவர், தமிழ்நாட்டின் பழைய
நிலையறிந்தவர். "மன்னும்
இமயமலை எங்கள் மலையே"
என்று மார்தட்டிக் கூறிய வீரர்
வாழ்ந்த தமிழகத்தில் இன்று
கோழைகளாய், மோழைக
ளாய் நாம் குறையலாகாது;
காளைகளாய் களிறுகளாய்
வாழ்தல் வேண்டும் என்று
ஆசைப்படுகின்றவர் அவர்.
செல்வின் செல்வர்
டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை
சாதனைக்கள்
உருவத்தில் தமி
முன்; உயர் குணத்
தில் தமிழன்; அன்பு
எனும் பண்பில் தமி
முன்; அடக்கத்தில்
தமிழன்; ஆண்மை
யில் தமிழன் நமது
அண்ணு! பரந்த
நெற்றி, முறுக்கான
மெல்லிய மீசை,
விசாலமான முகம்,
கட்டுமஸ்தான
உடல், பந்தயக்
குதிரை போன்ற
விறு விறுப்பான
நடை, பணிவான
நடவடிக்கை, வீர
உள்ளமெல்லாம்
ஒருங்கே அமையப்
பெற்றவர் அறிஞர்
அண்ணு.
கல்கி என். எஸ். கே.

MINISTER OF STEEL & MINES
INDIA

New Delhi, the 4th Sept., 1964.

அருமை திரு. கருணாநிதி,

தங்கள் கடிதத்திற்கு நன்றி. திரு. அண்ணாதுரையின் 56-வது பிறந்த நாள் விழாவைக் கொண்டாடுவது குறித்து மகிழ்கிறேன். அவருக்கு நீண்ட வெற்றிகரமான வாழ்வு ஏற்பட விழைகிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

சஞ்சீவ ரெட்டி

திரு. அண்ணாதுரை அவர்களின் 56-வது பிறந்த நாளை ஒட்டி, தங்கள் நாளிதழ் ஒரு சிறப்பிதழ் வெளியிடுவது குறித்து எனது மகிழ்ச்சி நிறைந்த வாழ்த்துகளை அளிக்கிறேன்.

தமிழகத்தின் "சிறு மனிதனே"-ஏழைபாட்டாளியை-உணர்ச்சிமிக்க - நம்பிக்கையுடைய மனிதனாக ஆக்கிய பெருமை திரு. அண்ணாதுரை அவர்கள் நடத்திச் செல்லும் இயக்கத்தைச் சாரும். இது எல்லோராலும் ஒத்துக்கொள்ளப்பட வேண்டிய ஒரு உண்மையாகும். சாதி, மொழி ஆகிய இரு முக்கியப் பிரச்சினைகளில் தி. மு. க.வினர் எடுத்துள்ள முடிவுகள் குறைந்தும் - சரிவர இல்லாமலிருப்பதாகவும், எனக்குப் பட்டபோதிலும், இந்தி எதிர்ப்பில் அதிகளக்கம் காட்டுவதற்குப் பதிலாக ஆங்கிலத்தை அகற்றி, பொதுவாழ்வில் தாய் மொழிக்கு ஆக்கம் தர தி. மு. க.-வினர் பாடுபடுவது நலம் என்று நினைக்கிறேன். என்னைப் பொறுத்தவரை, இந்திக்கு ஆதரவு திரட்டுவதில் நான் ஈடுபடவில்லை.

இந்த நன்னாளில் திரு. அண்ணாதுரை அவர்கட்கு எனது உளங்கனிந்த வாழ்த்துகளை அளிப்பதுடன், தமிழ் நாட்டில் அல்லற்படும் மக்களின் தலைவராக மட்டுமல்லாமல், வட இந்தியாவில் உள்ள தாழ்த்தப்பட்ட கோடானுகோடி மக்களின் ஒப்பற்ற தலைவராகவும் அவர் ஆகி, இந்தியாவின் முன்னேற்றத்தை தடுத்திடும் பார்ப்பனர்-பனியா கூட்டுச் சக்தியை முறியடிப்பதில் வெற்றிபெற வேண்டுமெனவும் விழைகிறேன்.

இங்ஙனம்,

ராம் மனோகர் லோகியா

DR. RAJAH
SIR MUTHIAH CHETTIAR
OF CHETTINAD

CHETTINAD HOUSE, ADYAR,
RAJAH ANNAMALAIPURAM P.O
MADRAS-28.

5th Septr. '64.

எனதருமை திரு. கருணாநிதி,

முதல் தேதியிட்டு எழுதியுள்ள தங்கள் அன்பான கடிதத்திற்கு நான் நன்றி கூறுகிறேன்.

திரு. சி.என்.அண்ணாதுரை எம். ஏ., எம். பி., அவர்களின் 56-வது பிறந்த நாள் விழாவை 1964 செப்டம்பர் 15-ம் நாள் கொண்டாடும் வகையில் உங்கள் நாளிதழான முரசொலி சிறப்பு இதழ் கொண்டு வருவதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன்.

அந்த மகிழ்ச்சியான நாளில் சிறப்பு இதழ் கொண்டு வர நினைப்பது உள்ளபடியே நன் நினைவாகும்! உங்கள் முயற்சி எல்லா வெற்றிகளையும் எய்த விரும்புகிறேன். திரு. அண்ணாதுரை அவர்களுக்கு மகிழ்ச்சியான பிறந்த நாளும் நாட்டிற்காகப் பணிபாற்ற நீண்ட ஆயுளும் ஏற்பட வேண்டும் என விழைகிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

M. A. முத்தையா செட்டியார்.

M. A. Muthiah Chettiar

P. T. Rajan.

'PALAYAM HOUSE'
TALLAKULAM
MADURAI-2.

திரு. அண்ணாத்துரை அவர்களின் 56-வது பிறந்த தின விழாவில் அவர்பால் எனக்குள்ள ஆழ்ந்த அன்பையும் நன்மதிப்பையும் முதற்கண் குறிப்பிட விரும்புகிறேன்.

இவர் தலை சிறந்த பேச்சாளர். அவர் எழுதியுள்ள பல நூல்கள் அவரின் எழுத்து வன்மையையும் விஷய ஞானத்தையும் நன்கு புலப்படுத்துகின்றன. நடிப்பு புலமையும் நாடகம் எழுதும் திறமையும் அவருடைய தனிச் சிறப்புகள்.

ஹிந்தி எதிர்ப்பு இயக்கத்தின் மூலம் திரு. அண்ணாத்துரை அவர்களும் அவர் சார்பாளர்களும் உண்மையான தேசிய ஒருமைப் பாட்டு இயக்கத்தை (Nation integration movement) நடத்துகிறார்கள் என்றால் மிகையாகாது.

திரு. அண்ணாத்துரை அவர்கள் வாழ்வின் பல துறைகளிலும் வெற்றி வீரராக விளங்க வேண்டுமென்ற என் அவாவையும் ஆசியையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இப்படிக்கு

பி. டி. ராஜன்

அதிஉயர்வு... அரியதிறன்...

குணவொழுக்கம்...

நிதானச் சிறப்பு...தளரா உறுதி...

வைரத்தலைவர்...



பெருமதிப்புக்குரிய. கண்ணிய மிக்க பேரறிஞர் அண்ணு அவர் களது ஐம்பத்தாருவது பிறந்த நாள் பெருவிழாவின்போது உள் ளக் கனிவுடன் பெருகும் என் நல் லாசியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்பு மிக்க உயர் திரு.சி.என். அண்ணுதுரை அவர்கள் கல்வி யறிவில் அதியுயர்வும், பேனுவின் வல்லமையில் அரிய திறனும்,

அதிவீரத்தலைவர்

நாவன்மையில் இனிய பெருஞ்சிறப்பும் படைத்திருப்பதோடு குணவொழுக்கப் பண்பாட்டிலும் அருமை மிக்க மேம்பாட்டைப் பெற்றவராய் விளங்கி நிற்கின்றனர்.

எந்த அறிவாளரும், எந்த நாட்டவராயினும், சில நிமிடங்கள் மாத்திரமே பேரறிஞர் அவர்களுடன் பழகிய போதிலுங்கூட, அவர்களது அரிய தன்மையையும் பெருமையும் கண்டு மதித்துப் பாராட்டத் தவறுவதற்கில்லை.

உள்ளத் தெளிவும், நிதானச் சிறப்பும், அதனடிப் பிறந்த தளரா உறுதியும், அயரா முயற்சியும் அருமைப் பேரறிஞர் அவர்களது குண அமைப்பின் பெருமை பூத்த இலக்கணமாய் விளங்குகின்றன. மெய்யெனக் கண்டதைத் தயக்கமின்றி ஏற்று, அதன் வழியில் மெய்வருத்தம் பாராது, சலியாது, கருமமே கண்ணாய் நின்று உழைக்கும் வைரத் தலைவர் அவர். அத்தகைய சிறப்பாளர் பெருமித்துடன்மக்கள் முன்னின்று நடாத்துவதும் கோடானு கோடி மக்கள் அவரைக் களிப்புடன் பின் பற்றிஉறுதியுடன் நிலைநின்று வருவதும் அழகியதோர் இயற்கை நிகழ்ச்சியே போன்றிலங்குகின்றன.

அன்புதந்து அன்புபெறும் உயர் உள்ளம் பெற்ற அதி வீரத் தலைவர் அண்ணா அவர்கள் நாட்டின் நற்பணியில் மேலும் ஓங்கிச் செழித்து விரிவுயர்சிறப்புற்று நற்சுகத்துடனும் பெருமகிழ்ச்சியுடனும் இன்னும் பன்னெடுங் காலம் இனிது வாழ்வராக!



ஆண்டு பல வாழ்க!

★

புலவர்

அன்பு கணபதி

தென்னகம் எல்லாத் துறையிலும் செழித்து முன்னேறச் சென்ற முப்பது ஆண்டுகளுக்கு மேலாகச்சிறந்ததொண்டாற்றி வருபவர்-

கலைபயில் தெளிவும் கட்டுரை வன்மையும் மிகுந்த சீரிய சிந்தனையாளர்;தன்னிகரில்லாப் பேச்சாளர்-

மாற்றாரையும் கவர்ந்து ஈர்க்கும் தெளிந்த இனிய எழுத்தாளர்- அறிஞர் அண்ணா.

ஐம்பத்தாறு ஆண்டு நிரம்பப் பெறுகின்றார்.

புலவர் உலகத்தின் சார்பில் 'தமிழய்யா' தனது மகிழ்ச்சியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கின்றார்; அறுபது எண்பது, நூறு எனத் தொடர்ந்து ஆண்டு பல வாழுமாறு உளமார வாழ்த்துகிறார்

M. A. MANICKAVELU,
B.A., B.L.

CHAIRMAN MADRAS LEG COUNCIL

FORT ST. GEORGE
MADRAS

September 7, 1964.

திரு. அண்ணாதுரை எம். பி., அவர்களின் ஐம்பத்தாறாவது பிறந்த நாள் அன்மையில் கொண்டாடப்பட விருப்பது கண்டு மகிழ்கிறேன்.

அவர் சட்டமன்றத்திலும் — சிறிது காலம் ராஜ்ய சபாவிலும் எனது தோழராக இருந்தார்.


அவருக்கு மகிழ்ச்சியுள்ள — நன்மை பயக்கும் பிறந்த நாட்கள் பற்பல அடுத்தடுத்து வர வேண்டுமென விழைகிறேன்.

தங்கள் உண்மையுள்ள
M. A. மாணிக்கவேலு

M. A. Manickavelu

அனுபவத்தின் தீர்ப்பு

பேராசிரியர் மயிலை சிவமுத்து



அறிஞர் அண்ணா அவர்களின் பேச்சுகருத்தாழமும் நகைச் சுவையும் மிகுந்து கேட்போர் மனதைப் பிணிக்கத் தக்கதாக இருக்கும். குறளிலே வள்ளுவர் கூறியுள்ளபடி பகைவரும் விரும்பிக் கேட்கத் தக்கதாகவும் இருக்கும். அவருடையது என்றும் ஒரே மாதிரியான பேச்சாக இராது. காலத்துக்கும் இடத்துக்கும் ஏற்ற வகையில் நகைச்சுவையும் உள்ளத்தை உருக்கும் கருத்துக்களும் அமைந்தனவாகப் புத்தம் புதிதாக மாறியவண்ணம் இருக்கும். அத்தகைய பேச்சினை அந்தக் காலத்தில் எவரும் பேசியதே இல்லை இந்தக் காலத்திலும் இவருக்கு இணை எங்குமே இல்லை. இனி வருங்காலத்திலும் இவரைப் போன்று ஒருவர் தோன்றுவார் என்று சொல்வதற்கில்லை. இது என் எழுபத்து நான்கு வயது அனுபவத்தில் கண்ட உண்மையான செய்தி.



இனிக்கும் அவன் புகழ்



கவிஞர் முடியரசன்

நாட்டுக்குப் பெருமைதரும் வீரன் ஆனன்
நாகரிக அரசியலின் தலைவன் ஆனன்
பாட்டுக்குப் பொருளானன் பகைசேர் நெஞ்சம்
பாராட்டும் பண்புடைய நல்லோன் ஆனன்
கேட்டுக்கு விதையாகும் மடமை என்னும்
கிளர்பகைக்குப் போராடும் எதிரி யானன்
ஏட்டுக்குள் அடங்காத புகழின் மிக்கான்
எம்மவர்க்கோர் உறவானன் அரணும் ஆனன்

பொருளுணர்ந்த அரசியலில் முதலி, பேச்சில்
பொடிவைத்து நகைசெய்யும் கலைஞன், நெஞ்சில்
அருளுயர்த்த பண்பாட்டில் ஐயன், ஆடை
அணி ஆடம் பரந்தன்னில் செட்டி, பேசும்
விரிவுரையால உளங்கவருங் கள்ளன், பகையை
வெல்கின்ற அறப்போரில் மறவன், கேடு
தருகின்ற பழிமொழியை நாடான், எங்கள்
தமிழ்த் தாயின் புகழ்காக்கும் பிள்ளை யானன்
நன்மகனும் பிள்ளையிவன் எம்மை ஈன்ற
நாட்டுக்கே பணிசெய்ய ஈன்ற தாயின்
பொன்வயிற்றை மணிவயிற்றை வாழ்த்து கின்றேன்














பூரித்த உள்ளத்தால் அண்ணு அண்ணு
என்னுமொரு உறவுமுறை சொல்லும் வண்ணம்
இந்நாட்டுத் துரை யிவனே என்னும் வண்ணம்
முன்மொழிந்து பெயர்வைத்த திருவாய் தன்னை
முக்காலும் வாழ்த்துகின்றேன் வாழ்க என்றே.

எழுத்தினிக்கும், பேச்சினிக்கும், எண்ண மெல்லாம்
இனித்திருக்கும், முத்தமிழும் வல்லான் றன்பால்
பழுத்திருக்கும் நடிப்பினிக்கும், கழகம் காக்கும்
பண்பினிக்கும், அரசியலின் திறமி னிக்கும்,
பழித்துரைக்கும் கயவரையும் பொறுத்தி ருக்கும்
பாங்குயர்ந்த சிறப் பினிக்கும் மேலோன் தன்னை
வழுத்துகிறேன் வாழ்த்துகிறேன் தமிழும் நாடும்
வாழ்வதற்கே பல்லாண்டு கூறுகின்றேன்

(குறிப்பு:—முதலி—முதல்வன்; நகைசெய்யும் கலைஞன்
மகிழ்வூட்டும் கலையில்வல்லான்; ஐயன்—தலைவன்;
செட்டி—ஆடம்பரத்தில் செட்டாக இருப்பவன்;
கள்ளன்—உள்ளங்கவர்கள்வன், நாடான்—
விரும்பான், மறவன்—வீரன் பிள்ளை—மகன்)



யார் துரோகி

அறிஞர் அண்ணு அவர்களை நாட்டைக் "காட்டிக் கொடுப் பவர்", "தேசத் துரோகி" அந் நியனுக்கு வால் பிடிப்பவர் என் றெல்லாம் சில அரசியல் அபலை கள்பிதற்றிவருகின்றனர். அவரது நாட்டுபற்று, தேசபக்தி, அரசி யல் பண்பு எப்படிப்பட்டது என்பதை அறியாதவர்கள்தான் அப்படிக் கூறிவருகிறார்கள்.

வெள்ளையர்கள் ஆண்டுவரும் நேரம் ஆச்சாரியார் முதலமைச்சர். ஆங்கில கவர்னருக்கும், முதலமைச்சருக்கும் கருத்து வேறுபாட்டால் பிளவு ஏற்பட்டது. ஆச்சாரியார் பதவியிலிருந்து விலகிவிட்டார். கவர்னர் தனது சொந்த அதிகாரத்தை வைத்து ஆலோசகர்களை நியமித்தார். அன்று சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியாக இருந்த நீதிக் கட்சியை தன் கைவசப்படுத்தி அவர்களை அமைச்சர்களாக அமைக்க கவர்னர் தீவிர முயற்சி செய்தார். அவர் முயற்சிக்குச் சில நீதிக்கட்சித் தலைவர்களும் தலை அசைத்தார்கள்.

அண்ணு அவர்கள் கவர்னரின் முயற்சியை எதிர்த்தார். "பெரும் பான்மையாக உள்ள ஒரு கட்சியை விடுத்து, மைனாரிட்டியாக உள்ள நாம் பதவியை ஏற்பது அரசியல் பண்பாகாது. நமமை பதவிப் பித்தர்கள், வெள்ளையர் தாசர்கள் என்று எதிரிகள் கூறுவது மெய்யாகிவிடும்" என்று தனது கருத்தையும் கூறி நீதி கட்சியை இணங்க வைத்தார்.

வையைய மனைவிஞும்



தி. மு. க.
தலைவர்
அண்ணு
மீது பாடிய
வாழ்த்து

திருமணக்கும் கலிமணக்கும்
திருத்தொண்டை நாட்டில்
சிறப்புமிகப் பெற்றிலங்குத்
திருக்காஞ்சி நகரம்
பெரும்புகழை எய்திடவே
பிறந்தபே ரறிஞ,
பிறரிகழ்ச்சி தனைமறக்கும்
பெருஞ்சால்பு மிக்கோய்,
ஒருகடவுள்
உளத்திருத்தி
உறுமூடக்
கருத்தை

நீடு வாழி!

பேராசிரியர்
அ. கி. பரந்தாமனர்.

JAYA


ஒழித்துவிடப் பாடுபடும் ஒப்பரிய தொண்ட,
இருங்கடல்சூழ் இவ்வுலகில் நீடுழி வாழி !
எழுத்தாளர் அண்ணுவே, நீடுழி வாழி !

இந்திவந்து புகுவதனுல் இனியதமிழ் சாகும்
என்றறிஞர் பெருமக்கள் எடுத்தெடுத்துச் சொலினும்
அந்தஇந்தி வெறியாளர் அதுபுகுந்து சிறக்க
ஆனபல வழிமிகவும் ஆற்றுவதைக் கண்டே
எந்தநிலை வந்திடினும் இந்தியையான் தடுப்பேன்
என்றுரைத்துக் கிளர்ச்சிசெய்து சிறைபுகுந்து வந்து
முந்திநின்று தடுத்துவரும் மூதறிஞ, வாழி !
முத்தமிழ்சால் அண்ணுவே, நீடுழி வாழி !

பலமொழிகள் பேசிவரும் பலமக்கள் உள்ள
பைந்தமிழ்நன் னுட்டினிலே பசுந்தமிழைக் காப்பார்
நலமிக்க உங்களைப்போல் நாட்டினிலே இல்லை.
நல்லபெரும் பேச்சாள, நற்றமிழர் தலைவா,
புலமிக்க அறிஞர்பலர் பெற்றிலங்கும் ஏந்தால்,
பொன்முமால் தமிழ்காக்கப் போர்தொடுக்கும் வீர,
கலையறிஞ, காஞ்சிநகர்த் தலைவா. நீ வாழி!
கடமைசெயும் அண்ணுவே நீடுழி வாழி!

(சந்தவிருத்தம்)

வாழி வாழி அறிஞர் அண்ணு இனிது வாழி வாழியே !
வாழி வாழி நின்றன் இயக்கம் வெற்றிபெற்று வாழியே !
வாழி வாழி நின்றன் தொண்டர் படையும் வாழி வாழியே !
வாழி வாழி வையை மணலின் நீடு வாழி வாழியே !



கடிகார முள் அசையும் காலம் காட்ட !
கடல்தனிலே அலைஅசையும் பாய்ச்சல் காட்ட !
ஒடியாத இடுப்பசையும் அழகைக் காட்ட !
ஒளிஉதடு இரண்டசையும் சிரித்துக் காட்ட !

புலவர் பொன்னிவளவன்

செடிஅசையும் ; கொடிஅசையும் ; குளிர்பூந் தென்றல்
செய்கின்ற குறும்புதனை எடுத்துக் காட்ட !
நடிகர்களின் உடல்அசையும் நடிக்க ! அண்ணு
நாக்கசையும் தாயகத்தை விழிக்க வைக்க !

பூத்தொடுக்கும் மங்கையரின் விரல
சைந்தா
பூமாலை புதுமாலை கிடைக்கும் ! நல்
பாத்தொடுக்கும் புலவர்களின் விரல
சைந்தா
பாமாலை-பயன்மாலை கிடைக்கும்
கட்டி
காத்துவரும்கழகத்தின் தலைவர் அண்ணு
கையிலுள்ள சுட்டுவிரல் அசைந்து
விட்டா
வாய்துடுக்குக் காங்கிரசின் வம்பு தும்
வாழ்க்கைக்கு முடிவுசரி யாய்க்
கிடைக்கும்

அலைகின்ற மேகத்திற் கேது ஓய்வு ?
அறிஞருக்கும் அதுபோல்தான்
ஓய்வே இல்லை
வளைகின்ற நாணலைப்போல் பணிவு
ஆனு
வைரத்தைப் போல்உறுதி வாய்ந்த
நெஞ்சம்
அலைகடல்போல் பேரறிவு ! கடலைப்
போ
ஆர்ப்பாட்டம் கிடையாது ; அமை
போக்கு
தலைவரென்றால் இவர் தலைவர் ! நம்ம
யெல்லா
தலைநிமிர்ந்து நடக்கவைத்த ஞான
வேந்தர்

தலைவரென்றால் இவர் தலைவர் !

JAYA

ஏடுபல படித்தறிந்த மேதை ! நாட்டில்
எவரெவரோ படிக்கின்ரூர் இருந்தும் என்ன ?
மாடுதின்னும் புல்லேத்தான் மானும் தின்னும் !
மானுக ஆய்விடுமா மாடு ? நாடு
கேடுகெட்டு வரும்நிலையைச் சொல்வார் ! ஆனல்
கெடவில்லே என்கின்ரூர் கதரணிந்தோர் !
மூடிவைக்கப் பார்க்கின்ரூர் சிரங்கை ! ஆனல்
மூக்குக்கா தெரியாது சீழின் நாற்றம் ?

சிங்கார நிலவினிலே களங்கம் உண்டு !
செந்தேனுக்கும் சிறிது தெவிட்டல் உண்டு !
சங்கீதக் குயில்பாட்டில் கருத்தைக் காணேம் !
சத்தான உச்சரிப்பைக் காணேம் ! வானச்
செங்கதிரோ பகல்மட்டும் வேலே செய்யும்
சோம்பேறி ! இராப்பொழுதில் தூங்கு மூஞ்சி !
மங்காத குணக்குன்று அறிஞர் அண்ணு !
மாசில்லே ! மறுவில்லே அவரிடத்தில் !

பூக்கின்ற ஒருகோடிப் பூக்கள் அண்ணு
புகழ்தன்னே ஒவ்வொன்ரூய் எடுத்துச் சொல்லிப்
பார்க்கட்டும், முடியாது ! அண்ணு,
பலகோடிப் பெருமைகளின் சொந்தக்காரர் !
நாக்கிருந்தால் கதிரவனின் கதிர்கள் — என்றும்
நடனமிடும் கடலலேசள் சொல்லிச் சொல்லிப்
பார்க்கட்டும்; முடியாது ! முடிப்பதற்குள்
பல்லாயிரம் ஆண்டு பறந்து போகும் !

பொன்போட்டால் பொன்வீளயும் தெற்கு மண்ணில்
பூக்கூட்டம் சிரிக்கிறதே ! எதனல் ? ஞான
மன்னவராம் அண்ணுவின் பிறந்த மண்ணில்
மலர்ந்ததனல் ஏற்பட்ட மகிழ்ச்சி ! வானில்
பொன்னிலவு சிரிக்கிறதே ! எதனல் ? செந்நெற்
போர்குவிக்கும் தாயகத்தில் புகழ்கு விக்கும்
அண்ணுவின் முகம்பார்ப்போம் ! அவரும் பார்ப்பார்
ஆசையுடன் நமை ! என்ற நினேப்பி னல்தான் !

பழங்காலக் கிளி ரங்கா ! ரங்கா ! என்னும் !
பலர் வீட்டில் கிளி அக்கா ! அக்கா என்னும் !
முழங்குகின்ற கழகத்தார் வீட்டில் உள்ள
முன்னேற்றக் கிளி 'அண்ணு ! அண்ணு !' என்னும் !
பழங்கால வள்ளுவரோ குறள் கொடுத்தார் ;
பாங்கான அண்ணுவோ குரல் கொடுத்தார் !
'எழுங்கள் என்ரூர் எழுந்துவிட்டோம் ! எழுச்சி ஊட்டும்
இலட்சியத்தேன் திருக்குரலே அண்ணு தந்தார் !



அறிவென்றால் என்ன அது?' என்ற நாட்டில்
அறிவுக்கே அறிமுகத்தைச் செய்து அந்த
அறிவானர்! அறிவேதான் அண்ணா! நாட்டில்
அண்ணாதான் இப்போது அறிவு! நெஞ்சம்
எரிகின்ற சிலர் இவரை வேண்டாம் என்றால்
'எங்களுக்கு எதற்காகப் புத்தி?' என்று
தெரியாத னத்தின்மேல் மோகம் கொண்டு
திண்டாடு கின்றார்கள் என்று அர்த்தம்!

கருநெல்லிக் கனிதந்தான் அதிகன்; ஔவை
கனித்தமிழில் தனித்தமிழில் பாடி வைத்தாள்;
பெருநிதியைக் கணக்குவழக் கின்றித் தந்தான்
பெருவள்ளல் பறம்புமலைப் பாரி; அந்த
வருமானம் பெற்றதனால் கபிலன் செந்தேன்
வரிப்பாட்டைத்—திருப்பாட்டைப் பாடி வைத்தான்!
அருமை மிகும் அண்ணாவோ அறிவைத்தந்தார்;
அவரைநான் கவிப்புலவன் பாடு கின்றேன்!

''செல்வோம்! செல்வோம்!'' என்று வருவ தால்தான்
செல்வத்தைச் செல்வமென்றான் தமிழன்! அந்த
நில்லாத செல்வம்ஏன்? சாகும் மட்டும்
நிலைத்திருக்கும் நல்லறிவைத் தந்தார் நல்ல
புல்லாங்குழல் நாதப் பேச்சு மன்னர்!
புலவருக்குப் புலவர்இவர்! கவிஞனெல்லாம்
சொல்லாமல் தோற்றோடிப் போவான் அண்ணா
சொற்பொழிவில் வந்துவிழும் உவமை கண்டால்!

தென்னாட்டின் முடிசூடா மன்னர்! கொட்டும்
தேனருவிப் பேச்சாளர் நமது அண்ணன்!
எண்ணத்தை இதயத்திற் களித்து நம்மை
எழுத்தாலே எழுப்பியவர்! தமிழைக் காக்கும்
அண்ணல் இவர்! அறிஞர் இவர்! நமக்கு வாய்த்த
ஆற்றல் மிகும் ஆசிரியர்! ஐம்பத்தாறு
என்கின்றார் இவர் வயதை! வாழ்க! வாழ்க!
இனிக்கின்ற செந்தமிழ்போல் வாழ்க! வாழ்க!





நம்பிக்கை

காங்கிரஸ் பாசிச எதிர்ப்பு முகாமின் போர்த் தலைவராக விளங்குகிறார்.

சனநாயகத்தின் காப்பாள ராகத் திகழ்கிறார்.

எவ்வளவு உயர்ந்த பதவிக் குப் போனாலும், காமராசரின் கருத்தெல்லாம் அறிஞர்

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நாம் சிறந்த இலக்கியங் களைப் படைத்தோம். உல கெங்கும் நம் பொருள்களுக்கு வரவேற்பு இருந்தது. கிளியோ பாத்ராவும் சாலமனும் நம் பொருள்களைப் பயன்படுத்தி னர். உலக உச்சியில் இருந்த நாட்கள்!

அந்த நிலை இன்று தலைகீழாக மாறிவிட்டது. இப்போது நாம் கூலிகளை ஏற்றுமதி செய் கிறோம். நம் மொழியைக் கெடு க்க இந்தி திணிக்கப்படுகிறது பல நாடுகள் நம் செல்வங்களை விரட்டத் துடிக்கின்றன.

இந்நிலை மாறுதா என்று நம் மக்கள் ஏங்குகிறார்கள். என் றுவது ஒருநாள் நமக்கு நல் வாழ்வு கிடைக்கும் என்று நம் பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

பெரியாரை பெரிதும் நம்பி னார்கள். இன்று அவர் காம ராசர் திருப்புகழ் பாடுகிறார். நம்முடன் இருந்து பிரங்கி முழக்க மிட்டவர்கள் இன்று மாற்று முகாமிற்கே சென்று விட்டார்கள்.

இந்தத் திசைத்திருப்பங்கள், தடுமாற்றங்கள், குட்டிக் கார ணங்கள் இவற்றிற்கெல்லாம் அஞ்சாதவர் அறிஞர் அண்ணா தான்.

இந்தி எதிர்ப்புப் போர்த் தலை அணியில் இன்று அவர் நிற்கிறார்.

அண்ணா அவர்களைச் சுற்றிய படியே இருக்கும்.

எண்ணற்ற இளைஞர்கள் இளந்தலை முறையினர், பிழை ப்புக்காக அயல் நாடுகளில் இருப்பவர்கள், காங்கிரஸ் திருவிளையாடல்களால் அவதிப்படுவோர் அத்தனை

பேரும் அவரை எதிர்நோக்கி யிருக்கிறார்கள்.

இட்லரின் இறுமாப்புக்கும், உலக அழிவுக்கும் மத்தியில் ஒரு சர்ச்சில்!

வெள்ளை நிறத்திமிருக்கும், கருப்பர் இழிவுக்கும் மத்தியில் ஒரு கென்னடி!

சாதி சமய வெறிக்கும், காட்டுமிராண்டிக் கலகங்களுக்கும் மத்தியில் ஒரு நேரு!

காங்கிரஸ் பாசிச தர்பாருக்கும், மக்களின் வேதனைக்கும் மத்தியில் அறிஞர் அண்ணு!



அண்ணுவின் நகைச்சுவை

மாவட்டத்துப் பெருமை

அறிஞர் அண்ணு அவர்கள் கூட்டத்தில் பேசும் போது நகைச்சுவை விருந்து நன்றாக கிடைக்கும் என்றாலும் நண்பர்களிடம் பேசிக்கொண்டிருக்கும்போது கிடைக்கும் நகைச்சுவை விருந்து தனிச்சுவையுள்ளது. அதில் ஒன்று வருமாறு:

தனது மாவட்டத்தின் பெருமையைப் பற்றி, வட ஆற்காடு நண்பர் ஒருவர் அறிஞர் அண்ணுவிடம் பேசிக்கொண்டிருந்தார் "பெரிய பெரிய அறிவாளிகள் எல்லாம் எங்கள் மாவட்டம்தான்!" என்று அவர் கூறினார்.

உடனே அறிஞர் அண்ணு 'உண்மைதான்' ஆனால் அவர்கள் அந்த மாவட்டத்திலேயே இருந்தால் இவ்வளவு புகழ் வந்திருக்காது. அதை விட்டு வெளியே வந்தால்தான் இந்தப் புகழ் என்றார். உடனே அருகிலிருந்த தஞ்சை மாவட்டத்து நண்பர் உரக்கச் சிரித்தார். அறிஞர் அண்ணு அவர்கள் "தஞ்சை மாவட்டமும் அப்படித்தான்!" என்றார்.

நடசத்திரம்

ஏ.பி.சனார்த்தனம் M.A.

ஆம்! அவர் திராவிடர்களின் ஒரே நம்பிக்கை நட்சத்திரம்!

அறிவில் சூரியர்களாகவும் ஆற்றலில் நிலவாகவும் இருக்கும் பலர்— காங்கிரஸ் ஆதிக்க இருளை எதிர்க்கும் திராணியற்று ஒளியிழந்து கிடக்கும் போது நம்பிக்கைக்கு தெம்பூட்ட வந்த நம்பிக்கை நட்சத்திரம் அறிஞர் அண்ணு ஒருவர்தான்!

அவர் பல்லாண்டு வாழ்க!

காட்சிக்கு எளியன்



பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தனர்

அண்ணுமலருக்கு எதைப்பற்றி எழுதலாம் என்று சிந்தித்துக் கொண்டிருந்தேன். அரசியலா? சமூக இயலா? வரலாறு? வேறு ஏதாவது பொருளா? எது இருக்கலாம் என்று கேட்டது என் மனம். 'எத்துறையிலும் வல்ல அவர்' மலருக்கு எதுபற்றியும் எழுதலாம் என்றுலும் ஏதேனும் ஒன்றைப் பற்றித்தானே தீட்ட வேண்டும். இவ்வாறு எண்ணமிட்டுக் கொண்டிருந்தபோதே எனது நெருங்கிய நண்பர் ஒருவர் உள்ளே வந்தார். அவர் முகத்தில் ஏதோ ஒரு மாற்றத்தைக் கண்டேன்; அவர் ஏதோ சொல்லத் துடித்துக் கொண்டிருந்தார். வந்தவர், பக்கத்தில் உட்கார்ந்து 'என்ன எழுதப் போகிறாய்? என்று வினவினர். நான் 'எழுதுவது கிடக்கட்டும் நீ ஏன் இப்படி பதறுகிறாய்' என்றேன். அவர் 'அதுவா' என்றபீடி கையோடு பேசத் தொடங்கினர்.

''இன்று அரசியல் நிலையின் உச்சியில் இருக்கும் எனக்கு வேண்டியநண்பரை உனக்குத் தெரியுமே. நான் அவரிடம் இது வரையில் ஓர் உதவியும் பெறுவிட்டாலும் நான் அவருக்குச் செய்த உதவிகள்பல. இதை நாடறியுமே. அவர் உடநலமில்லை எனக் கேள்விப்பட்டு அவரைக் காணச் சென்றேன் அவர் 'அணுக்கத் தொண்டரி' டம் தொலை பேசி வழிநேரம் குறித்தே காணச் சென்றேன். நான் அவரிடம்அதிகமாகப் போவது கிடையாது, என்றாலும், உடநலமில்லை யாதலால் காணவேண்டுவதற்காகவே சென்றேன். நான் சென்றவேளையில் உடனே யாருடனே கண்டு பேசிக் கொண்டிருந்தார், அணுக்கத் தொண்டரிடம் அவர் நலம் பற்றிக் கேட்டறிந்தேன். எனவே அப்படியே புறப்பட்டு வந்துவிடலாம் என எண்ணினேன். எனினும் 'இவ்வளவு தூரம் வந்த பிறகு அவரைக் கண்டுதான் செல்லுங்கள் என்று அந்த அணுக்கத் தொண்டர் சொன்னதைக் கேட்டு அதுவும் சரியென அங்கேயே உட்கார்ந்தேன்.


உள்ளிருந்து உயர் அலுவலர் ஒருவர் வெளியே வந்தார். அவர் வருவதற்குள் மற்றொரு 'பெரிய மனிதர்' வந்துவிட்டார். எனவே 'அணுக்கத்தொண்டரும்', பக்கத்திலிருந்து பணிவிடை செய்யும் தணியாளும் அவரை உள்ளே விடவேண்டும் என்று முன் வந்து நின்றனர். அவரும் சென்றார். அவர் வெளிவருவதற்குள் மற்றொரு பெருஞ் செல்வர், ஒரு வாணிபர், ஒரு தொழிலதிபர், ஓர் ஆலைமுதலாளி இப்படி காரில் ஒருவர்பின் ஒருவராக

அனுப்புவதில் அப்பணியாளன் தீவிரமாக முயன்றுகொண்டிருந்தான். அங்கு வந்தவருள் ஒருவர் அவனுக்கு முன்பொரு கால் 'ஒருபெரும்' உதவி செய்தார் என்பதையும் மற்றவனோடு பேசிக்கொண்டிருக்கும்போது குறித்தான். அவனுக்கு பண உதவியோ வேறுஎதுவோ செய்பவர்களே வந்தால் காத்திருக்க வைக்காது அனுப்பவே அவனே அங்கே வைத்திருந்தார்களோ என நினைத்தேன். .அணுக்கத் தொண்டர்' அவர் வாய்ச் சொல்லுக்குக் கட்டுப்பட்டு அடங்கியபோது அவன் பெறும் உதவியால் அவருக்கும் பங்குஇருக்குமோ என நினைக்க வேண்டியிருந்தது.

''கடைசியில் ஆறு மணிக்குச் சென்ற நான் ஒன்பது மணி வரை காத்திருந்தேன். மேலே சொன்னபடி செல்வர், ஆலை முதலாளி, வியாபாரி, தொழிலதிபர் அலுவலர் கண்டு சென்றபின் நான் தேடிச்சென்ற அவரை நேரில் காண முயன்றேன். அவர் இனி யாரையும் பார்க்க முடியாது என்று சொல்லி விட்டார்' என்றான் அப்பணியாள். நான் அவனுக்கு எப்போதும் ஒன்றும் தரவில்லை என்பதையும், அது என் வழக்கம் அன்று என்பதையும் ஒத்துக்கொள்ளுகிறேன். எனினும் நான் 'நீ அவரிடம் என் பெயரைச் சொல்; ஒன்றும் பேச வேண்டியதில்லை. சொன்னால் வரச்சொல்வார்; பார்த்து வணக்கம் செலுத்தி வந்து விடுகிறேன்' என்றேன். அவன் ஒரே அடியாக முடியாது என்று மறுத்து விட்டான். என்னை நேரங் குறித்து வரச்சொன்ன அதே அணுக்கத் தொண்டர் அவனே மீறிப்பேச முடியாது. 'அதுதான் சரி, நாளை வாருங்கள்' என்றார் அமைதியாக. நான் ஒன்றும் சொல்லாது வெளிவந்து விட்டேன். நாளை வந்து பார்த்து எனக்கு ஆக வேண்டியதும் கிடையாது. எனக்கு முன்பே அங்கே காத்திருந்த சிலரும் வெளியேற்றப் பட்டனர். அவர்களுள் ஒரு சிலர் பகல் மூன்று மணியிலிருந்து காத்துத் தவம் கிடந்தவர்கள்; ஒருசிலர் 100 அல்லது 200 கல் தொலைவிலிருந்து வந்தவர்கள். அவர்கள் அனைவரும் வெளியே வந்தபோது பேசிக் கொண்டவற்றிலிருந்து அவர்கள் அத் தலைவரை அன்பால் காண வந்தவர்களெனவும் அத் தலைவர் வாழ்வும் வளமும் பெருக உழைத்து ஓட்டாண்டியானவர்களெனவும் அறிந்தேன். இந்த நிலையில் நேராக இங்கே உன்னிடம் வந்தேன் என்றார் என் நண்பர். மணி 10-30க்கு மேல் ஓடிக்கொண்டிருந்தது. நேரமாகிவிட்ட படியால் நண்பர் அவர்வீட்டுக்குப் புறப்பட்டார்.

நண்பர் சென்றுவிட்டபோதிலும் கிளறிவிட்ட எண்ண அலைகள் என் நெஞ்சை அரிக்கத் தொடங்கின. உச்சி நிலையில் உள்ளவருள் சிலர் நல்லவராக இருக்கலாம். சிலர் பொல்லாதவராகவும் இருக்கலாம். ஆனாலும் சில நல்லவர்களை அவர் தம் சுற்றுத் தேவதைகள் பொல்லாதவர்களாக ஆக்கி விடுகின்றன. ஆளுபவர் மக்களை நேரில் காணவேண்டும். பண்டைக்காலத்தில் பாராண்ட பண்புள்ள தமிழ் மன்னர் போன்று மக்களிடம் பழக வேண்டும். அவர் குறையறிந்து போக்க வழி வகுக்க வேண்டும் என்றெல்லாம் இன்று பேசப் பெறுகின்றன. அதிலும் இந்த மக்களாட்சிக் காலத்தில் இச் செயல் இன்றியமையாது வேண்டப் படுவதேயாகும். ஐந்தாண்டுக்கு ஒரு முறையாவது திரும்பவும் மக்கள் முகம் நோக்கி, அகம் குழையக் கையேந்தி 'வாக்கினை' வேண்டும் நாள் இது. எனவே இவ்வாறு மக்கள் தொடர்பினை ஆளும் கட்சிகளும் ஆள விரும்பும் கட்சிகளும் மேற்கொள்ள நினைத்தல் தவறு இல்லை. ஆனால், இவ்வாறு கூறிக்கொண்டே செயல் முறையில் தக்காரை இழிவு படுத்தி, கள்ள வணிபரையும் கொள்ளை லாப முதலாளிகளையும் கைதூக்கி விடுகின்ற செயலைக் காணும் போது கண்ணீர் வடிக்கத்தான் தோன்றுகிறது. ''காட்சிக் கெளியவன் கடுஞ் சொல்லன் அல்லேல் மீக்கூறும் மன்னன் நிலம்'' என்ற வள்ளுவர் அறம் வகுத்த நாட்டில் இந்தக் கொடுமை என்றால் நாட்டில் நல்லவர் வாடாது என்செய்வர்? நண்பர் சொல்லிய செயல் நாட்டில் எங்கோ ஒரு மூலையில் மட்டும் நடப்பதன்று; அச்செயல் நடவாத இடமே கிடையாது என்பது கண்கூடு.

இந்த எண்ண அலைகளுக்கிடையில் 'அண்ணா மலரு'க்கு இதைத்தான் எழுதத் தொடங்கினேன். **தமிழ்நாட்டில் வீறு நடையிட்டு வெற்றிப்பாதை நோக்கிச் செல்லும் கட்சி அவருடையது. சென்னை மாநகராட்சியையும் வேறு வேறு சில நகராட்சி, ஊராட்சி மன்றங்களையும் இன்று கைப்பற்றியுள்ள கட்சி, நாளை நாடாளும் மன்றங்களையும் கைப்பற்றும் காலம் வரும்** அக்காலத்தில் அண்ணாவும் அவர் வகுத்த வழி செல்லும் எல்லோரும் வள்ளுவர் காட்டிய தூய நெறியிலிருந்து தவறக் கூடாது என்பது என் வேண்டு கோள். மக்களை — பொதுமக்களை—ஏழை மக்களை மனமறிந்து அவர்களை நேரில் கண்டு, பேசி, கருத்தறிந்து குறையறிந்து தீர்க்க வேண்டுவதே மக்களாட்சியில் ஆளுவோர் செய்யவேண்டிய முதற் பணி, ஆளுங் காலத்து 'தம்மால், தம் பரிசனத்தால்' மக்களுக்கு யாதொரு மனத்தாங்கலும் இல்லையாகப் பார்த்துக் கொள்ளல் வேண்டும். இந்த நியதியிலிருந்து தவறிய எந்த மக்களாட்சியும் உலகில் அன்று தொட்டு இன்றுவரை வாழவில்லை என்பதை வரலாறு காட்டுகின்றது. 'காட்சிக்கெளியராய் கடுஞ்சொலிலராய்' வாழ்ந்து 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உறவுமுறையில் மக்களை அணைத்துச் செல்லும் நல்லவரே நாட்டினை நெடுங்காலம் ஆள வல்லவராவர். அத்தகைய நல்லவர், மக்கள் வாழ்வு மலரத்தாம் வாழ்வர். அந்நாளே நல்லநாள் ஆம்! அந்நாள் வருவதாக!



கனன்று எரியும் தேச பக்தி

[முத்தாரம் இதழுக்கு பேட்டி கண்டபோது ஜனசங்கத் தலைவர் வாஜ்பாயி எம்.பி. இந்தி எதிர்ப்புக்காக சிறை சென்றவர்கள் பற்றியும் அறிஞர் அண்ணா அவர்கள் பற்றியும் கருத்து தெரிவித்தார். அறிஞர் அண்ணா அவர்கள் பற்றி கூறிய கருத்துக்கள் கீழே தரப்பட்டிருக்கிறது. இந்தி எதிர்ப்புக்காக சிறைசென்றவர்கள் பற்றி அவர் கூறும்போது ''இந்தி எதிர்ப்புக் கொள்கையை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். ஆனால், தாங்கள் ஏற்றுக்கொண்ட கொள்கைக்காக தங்களுக்கு நீதியென்று தெரிந்த ஒன்றுக்காக சிறை செல்பவர்களின் தியாக உணர்வினைப் பாராட்டவே செய்கிறேன்'' என குறிப்பிட்டார்]

திரு. அண்ணாதுரையை நான் பல தடவை சந்தித்திருக்கிறேன். மாநிலங்களவை உறுப்பினராக டில்லி வந்தபோதும் பார்த்திருக்கிறேன்,

அவருடைய எளிமையும், நேர்மையும் தமிழகத்திற்கு பணிபுரிய கனன்று எரியும் தேச பக்தியும் கண்டு நான் மிகவும் கவரப் பட்டுவிட்டேன்.


நான் அவரது கன்னிப்பேச்சை மாநிலங்களவையில் கேட்டேன். அந்தச்சபைக் குள்ளே மிகவும் மனங் கவரத்தக்க வகையில் அது இருந்தது.

I met Mr. Annadurai many times. And also met him at Delhi where he came as a member of Rajya Sabha. I was highly impressed by his simplicity, frankness and burning patriotism to serve Tamil-nad.

I heard his maiden speach in Rajya Sabha. His Speach was highly impressed indoor.



பிறந்த நாள்



பரிசு

என். வி. நடராசன். எம். எல். சி

தென்னக மக்களின்–ஏன் இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள நன் மக்களின் இதயங்களிலே சிறப்பிடம் பெற்றிருக்கும் நமது அண்ணா அவர்களின் 59–வது பிறந்தநாள், நம் அனைவருக்கும் தித்திக்கும் திருநாளாகும். கழகப்பணியிலே ஈடுபட்ட ஒவ்வொருவரும் அறிஞர் அண்ணா அவர்களைக் கட்சித்தலைவராக மட்டுமல்ல, குடும்பத்தலைவராக உளமார எண்ணி நடந்து வருகிறார்கள் என்றால் மிகையாகாது.

அதிகாரபலமும், பணபலமும் மற்ற வசதிகளும் ஏராளமாகக் கொண்டுள்ள காங்கிரஸ், கழகச்சக்தியின் முன் தொடர்ந்து தோல்வி கண்டு வருகிற தென்றல் கழகத் தோழர்களிடையேயுள்ள அந்தக் குடும்ப பாசமும் அண்ணா அவர்கள் நம்மிடம் கொண்டுள்ள தூய்மையான அன்பும் அக்கறையுமேதான்!

அண்ணா அவர்களின் பொதுப்பணி அப்படிப்பட்டதாகும். இன்று அவர்கள் ஏதோ சற்று நடுத்தர வாழ்க்கையில் உள்ளார்கள். ஆனால் அவர்கள் வாழ்க்கைத்துறையில் எவ்வளவோ தொல்லைகளை அனுபவித்த சமயத்திலும் கொள்கை உறுதியிலிருந்து சிறிதுகூட தவறினார்களில்லை. அண்ணா அவர்களின் அந்த அரசியல் பண்புதான் இன்று தமிழ்நாட்டிற்கே ஒளிவிளக்காய்த் திகழ்கின்றது என்று திட்டவட்டமாகக் கூறுவேன்.

அறிஞர் அண்ணா அவர்களை விட கல்வி கற்றவர்கள், ஆற்றல் மிக்கவர்கள், புகழ் படைத்தவர்கள் யாருமில்லையென்று நான் கூறமாட்டேன். ஆனால் அவர்களெல்லாம் தம் வீட்டைப்பற்றி, அவர்களது குடும்பத் தலைமுறைப் பற்றி எதிர்கால வாழ்வைப்பற்றித் திட்டமிட்டு அத்துறையில் பொருளீட்டும் வழி சென்று விட்டார்கள்! அறிஞர் அண்ணா அவர்கள் தாமும் வாழவேண்டும், நாடும் அதைவிட சிறந்த வாழ்வு பெறவேண்டும் என்ற கொள்கையை தனது பேச்சாக–மூச்சாக செயலாகக் கொண்டு, தொண்டாற்றி வருகிறார்கள்.

தென்னக அரசியல் வரலாற்றில்–சிறப்பாகத் தமிழக வரலாற்றில் அவரது அரசியல் பணி பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்கனவாகும்.

தம் சொந்த நாட்டிலேயே அரசியல் உரிமையற்றும் சமுதாயத்துறையில் அடிமைப்பட்டும் வாழ்ந்து வந்த திராவிடப் பெருங்குடி மக்களைத் தட்டி எழுப்பிய பெருமை, சர்தியாகராயர், டாக்டர் நாயர், டாக்டர் நடேசனார் போன்ற தலைவர்களையும் மதிப்பிற்குரிய பெரியார் அவர்களையும் சாரும் என்றால் அவர்களால் எழுப்பப்பட்ட அந்த எழுச்சியும் உணர்ச்சியும் காட்டு வெள்ளம்போல வீணாகி விடாமல், கரை அமைத்து நாட்டுக்குப் பயன்படுத்துவது போன்று அரசியல், சமுதாயம், அரசுத் துறைகளில் திராவிடப் பெருங்குடி மக்கள் தங்களின் உரிமைகளைப்பெற அறிஞர் அண்ணா அவர்கள், அமைப்பு முறையோடு கூடிய கழகத்தை அமைத்தார்கள்.

நான் வெறும் புகழ்ச்சிக்காகக் கூறமாட்டேன். 1949–ம் ஆண்டு, அண்ணா அவர்கள் திராவிடமுன்னேற்றக் கழ

கத்தை உருவாக்க இல்லை என்றால், பொதுவாக இந்தியத் துணைக்கண்டத்தின் அரசியலிலும், குறிப்பாக தமிழ் நாட்டின்–தமிழ் மக்களின் வாழ்விலும் இருள் சூழ்ந்து "சர்வாதிகாரம்" உருவாகியிருக்கும்-

இத்தகைய தொண்டில் எவ்வளவு அடக்கு முறைகள் எதிர் நோக்கி வந்தாலும் அவைகளைத் துச்சமாக மதித்து நாம் கடைமையிலிருந்து தவறாது தலைநிமிர்ந்து செல்வதற்குப் பெருந்துணையாக–வழிகாட்டியாக அமையப் பெற்றிருப்பது அறிஞர் அண்ணா அவர்களின் அன்பும் பண்பும், பாசமும், பற்றுமேயாகும்.

ஆதலின் நம் வழிகாட்டி அண்ணா அவர்களுக்கு நாம் பிறந்தநாள் பரிசாக வழங்க வேண்டியது யாதெனில் அவரால் தோற்றுவிக்கப்பட்டு, வளர்க்கப்பட்டுவரும் கழகம், மேற்கொண்டுள்ள பணிகள் யாவும் வெற்றியுற–அதன் வாயிலாக நாடு நலம் பெற நமது தொண்டினைக் கட்டுப் பாடாகவும், கடமை உணர்ச்சியுடனும், தோழமை உணர்ச்சியுடனும் ஆற்றிவர மேலும் மேலும் உறுதி கொள்வதேயாகும்.

இந்தப் பரிசுதான் அண்ணா அவர்களுக்கு உளங்கனிந்த பரிசாகும். இந்தப் பரிசு மூலம் தான் அண்ணா அவர்களின் நீடித்த தலைமை கழகத்திற்கும், நாட்டுக்கும் கிடைக்கப் பெறும்.

வாழ்க அண்ணா

வெல்க அறப்போர்!

★

பெரியாரைக் காப்பாற்றினார் அறிஞர் அண்ணா!




அண்ணா அவர்களை "பெரியார்தான் வாழவைத்தார்" என்று பலர் பேசி வருகிறார்கள். அண்ணா அவர்கள் பெரியாரை பாதுகாத்திருக்கிறார் என்பதற்கு பல நிகழ்ச்சிகளைக் கூறலாம்.

திருச்சி புத்தூர் மைதானத்தில் திராவிடர் கழக மாநாடு ஒன்று நடைபெற்றது. அதில் தீர்மானங்கள் நிறைவேற்றப் படும் போது ஆலயப் பிரவேசத் தீர்மானத்தை பெரியார் பிரரேபித்தார்.

தூத்துக்குடி சிவசாமி அதை எதிர்த்தார், "கோயிலுக்குப் போவதை எதிர்த்து வருகிறோம். அங்கு போனால் மக்கள் அறிவு பாழாகும் என்று கூறுகிறோம். அப்படி இருக்கும் போது ஆகி திராவிடர்களுக்கு ஆலயப் பிரவேசம் வேண்டுமென்பது சரியாகாது", என்று கூறினார். இதை ஆதரித்து நாவலர் நீண்ட நேரம் பேசி கூடியிருந்தோர் மனதை தன் பக்கம்திருப்பிவிட்டார்.

பெரியார் தீர்மானம் தோற்றுவிடும் நிலை ஏற்பட்டது. மேடைக்கு அருகில் இருந்த அண்ணா அவர்களை அழைத்து வந்தார்கள்-அண்ணா பேசினார். சிவசாமி நாவலர் பேசியதை ஆதரித்துப் பேசி விட்டு, "கோவிலினுள் என்னதான் நடக்கிற தென்பதை அவர்களும் தெரிந்து கொள்ளட்டுமே" என்று பேசி பெரியார் தீர்மானத்தை ஆதரித்தார்-பெரியார் தீர்மானம் நிறைவேறியது, அன்று அண்ணா இல்லாவிட்டால் பெரியார் தீர்மானம் தோற்றிருக்கும்.



இனியை பெருக எமக்கே!

க.அன்பழகன் எம்.ஏ.,

பண்டைத் தமிழ் மக்கள் வாழ்ந்த வளமிக்க வாழ்வும், புலவர்கள் பெற்றிருந்த பெருமதிப்பும், மன்னர் தம்மாட்சியும் விளக்கம் பெறுவது சங்க இலக்கியச் செல்வத்தாலாகும்.

சங்க இலக்கியப் பாட்டுகள் மூலம் அக்கால மன்னர் தம் ஆற்றல், வீரம், கொடைச் சிறப்பு முதலானவற்றையும், புலவர்தம் தகுதியையும் திறத்தையும் அறிந்து மகிழும் நல் வாய்ப்பு நமக்குக் கிடைத்துள்ளது.

சங்ககாலப் புலவர்களுள்ளும், தனிப்புகழுடன் விளங்கும் தமிழ்மூதாட்டி ஔவைப் பெருமாட்டியை அறியாதார் இல்லை. அவரால் பாடப்பட்டோர் பலருள்ளும், அவரது அன்புக்கும் போற்றுதலுக்கும் உரியராகும் தனித்தகுதி பெற்றுத்திகழ்ந்தவன் அதியமான் நெடுமான் அஞ்சியாவான்.

அதியமான் தகடூரைத் தலைநகராகக் கொண்டு கொங்கு மண்டலத்தின் ஒரு பகுதியை ஆண்டுவந்தான். தனிப்பெரு மன்னனாக, பெருவீரனாக, கொடைவள்ளலாக, புலவரை பேணும் பெருமதியுடையவனாக விளங்கினான். புலமையைப் போற்றும் உள்ளத்தில், நெடிது தான்வாழ்தற்கு எனத் தேடிப்பெற்ற அரிதான கருநெல்லிக்கனி ஒன்றையும் தானுண்ணாது ஔவையை உண்ணச் செய்து உள்ளம் மகிழ்ந்த தனக்கென வாழாப் பெரியோன்.

அவனைக்குறித்து ஔவை பாடிய பாட்டு ஒன்றின் கருத்து இது:

நெடுமானஞ்சியின் வானளாவிய பெருமையும் புகழும் அவரது கருத்தில் படுகின்றன. நெடுநல் யானை ஒன்றும் தன் தோற்றத்தால் அவருக்கு உவமையாகிறது. அஞ்சியைச் சுற்றிச் சூழ்ந்துள்ள பலரும் சிறுபிள்ளைகளைப் போல தோன்றுகின்றனர். யானையைச் சூழ்ந்து நிற்கும் சிறுவர்களும் காட்சி தருகின்றன. அஞ்சி அனைவரிடமும் அன்பு செலுத்திக் கண்ணோடுவதையும், முகமலர்ந்து உரையாடுவதையும் இனிதாகப் பழகுவதையும் காண்கின்றார். அந்த மதமிகுதற்குரிய யானையைங் கூட சிறுவர்கள் நெருங்கவும் பழகவும் இடந்தரும் இயல்பு அவர் மனத்தில் புலனாகிறது. உடனே பாட்டும் பிறந்தது.

சிறு அளவே ஆழமுள்ள ஒரு நீர்த்துறை. பெருங்களிறு ஒன்று அந்த நீரில் இறங்கி உடம்பு முற்றும் குளிர வேண்டி மெல்லச் சாய்ந்து படிகின்றது, அந்தச் சிற்றாரில் வளரும் சிறுவர் கூட்டமெல்லாம் அதுபழக்கமான காட்சி. அவர்கள் ஓடோடி வருகின்றனர். யானையின் பக்கம் நெருங்கி, அதன் வழவழப்பான வெள்ளிய கூரிய தந்தங்களை கையால் தொட்டுத் தடவி மகிழ்கின்றனர். யானையும் அதனை விரும்பி இன்புறுவதே போன்று நடக்கின்றது.

அதைப்போன்றே, புலவர்களும், பிறகுடிமக்களும் நெருங்கி உரையாடிப் பழகுதற்கு இனியனாக ஒளியனாக உள்ளவன் அதியமான். ஆனால் அதே யானை மதங்கொண்ட நிலையில் அதன் பாகனும் நெருங்குதற்கு அஞ்சம் வண்ணம் துன்பம் விளைவிக்கும் இயல்புடையதாவதைப் போன்று அவனும் தன் பகைவர்கட்கு தாங்குதற்கும் தடுத்தற்கும் அரிய துன்பத்தைச் செய்யும் ஆற்றலுடையவனாக விளங்குகிறான் என்கிறார் ஔவை.

Dr. C. P. Ramaswami Aiyar
VICE CHANCELLOR

ANNAMALAI UNIVERSITY
ANNAMALAINAGAR P. O.
(SOUTH INDIA)

அன்புள்ள ஐயா,

செப்டம்பர் முதல் தேதியிட்ட தங்கள் கடிதம் மூலம் திரு. சி. என். அண்ணாதுரை அவர்களின் 56-வது பிறந்த நாளைக் கொண்டாடப் போவதாகவும், அன்று முரசொலி சிறப்பு இதழ் கொண்டுவரப்போவதாகவும் அறிந்து மகிழ்கிறேன்.

தயை கூர்ந்து எனது பாராட்டுதல்களையும் நல்வாழ்த்துகளையும் திரு. சி. என் அண்ணாதுரை அவர்களுக்குத் தெரிவியுங்கள்.

தங்கள் முயற்சி எல்லா வெற்றியையும் அடைய விழைகிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

சி. பி. ராமசாமி ஐயர்.

இந்த இனிய காட்சி, இன்று எண்ணும் போதும் சுவை கல்கின்றது.

அதியமான் நெடுமான் அஞ்சியின் உள்ளத்து மென்மையையும் வீரத்து வன்மையையும் விளக்கும் உவமையாகும். அந்தப் பெருங்களிறு அறிஞர் அண்ணாவின் தகுதிச்சிறப்புக்கும் ஏற்ற உவமையாகிறது. உருவத்தால் அன்றி உள்ளத்தால் நீர்த்துறையிலே படிகிறது யானை! அண்ணாவின் மனம், சிந்தனை, தமிழ்த்துறையிலே படிகின்றது. யானை நீரில் தோய்வதில் பெற்ற களிப்பு - தமிழில் தோய்வதிலே தமிழ்பண்பாட்டை எண்ணுவதிலே அண்ணா பெறுகிறார். அவரிடம் அன்புடைய கழகத் தோழர்களும் தம்பிமார்களும், அவரை எந்த நேரத்திலும் நெருங்கிப் பேசவும், பழகவும், வாதிடவும் அவர் உரிமை நல்கியுள்ளார், யானையின் வெண் கோட்டைசிறார் தொட்டுத் தடவி மகிழும் நிலையை ஒப்பதாக உள்ளது. சிறார்–பெரிய யானையை அதன் கூரிய கொம்பை தொட்டதிலே அடையும் இன்பத்தை அண்ணாவின் தம்பிமார்களும் தோழர்களும், அறிவாற்றல் அண்ணாவோடு உரையாடியதிலே பெறுகின்றனர். அண்ணாவும்-எவ்வளவு சிறிய வராயினும்அவரோடும்கலந்து பேசுவதில் மகிழ்கின்றார்.

பலரும் வியந்து பாராட்டும் ஆற்றல் பெற்ற அறிஞர் அண்ணா அவர்கள் தம்மவர்க்கு-எளியராய், இனியராய் இருப்பினும், அரசியல் இலட்சியத்தால் மாறுபாடு கொண்டவர்கட்கு, (மாற்றுக் கட்சியினர்க்கு) நெருங்குதற்கரிய மதங்கொண்ட யானையே போன்று விளங்குகின்றார். அவரது பெரிய உடம்பாக கழகமும், கழகத்தின் உள்ளமாக அவரும், இயங்குவதால், கழகத்தின் மூலம் மாற்றார்க்குத் தாங்குதற்கரிய தோல்வியை விளைவிக்கிறார்.

கழகப் பெரும் பொறுப்பை பெற்றுத் தலைவராக விளங்கும் அண்ணா அவர்கள், தோழமைக்கு எளியராகவும் நண்பர்க்கு இனியராகவும் அமைந்து, மாற்றார்க்குத் தமது அறப்போராட்டத்தால் அஞ்சத்தக்க நிலையைத் தோற்றுவித்திருக்கும் நிலைமை, சிறுவர்க்கு விளையாடுவதற்கும் இடனாகும் நீர்த்துறை யானை, எவரும் நெருங்குதற்கும் அச்சந்தரும் மதங்கொண்ட யானையாகவும் விளங்கும் காட்சியை நினைவூட்டுவதன்றோ!

சங்ககாலச் செம்மல் அதியமானைப்பாராட்டி ஔவை பாடிய பாட்டு, அறிஞர் அண்ணாவின் இனிய இயல்பையும் பேராற்றலையும் எண்ணச் செய்வதன்றோ! புறநானூற்றில் உள்ள அந்தப் பாட்டு இது,

"ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின் நீர்த்துறை படியும் பெருங் களிறு போல இனியை பெருமஎமக்கே! மற்றதன் துன்னருங்கடாகம் போல இன்னாய் பெருமநின் னேன்னார்க்கே!"

இனியை பெருமஎமக்கே! என்னும் ஔவை வாக்கு அண்ணாவை அறிந்துள்ள நமது உள்ளத்திலும் ஊறுகின்றதன்றோ! அந்த உணர்வோடு, எமக்கினிய பெரும், வாழ்க பல்லாண்டு என அறிஞர் அண்ணா அவர்களை வாழ்த்துவோம் இத்திருநாளில்!

★

காஞ்சியிற் தோன்றிய கதிரவன்



இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர்

தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதில்லார்
தோன்றலிற் தோன்றாமை நன்று.

—என்பது வள்ளுவன் வாக்கு. தோன்றும் கோடிக்கணக்கான மாந்தருள் மக்களுடைய நெஞ்சில் என்றும் நிலைத்திருக்கக்கூடிய சான்றோர் வெகு சிலரேயாவர். இத்தகையோரில் பிறர் நலம் பேணி பெரும் சிறப்புற்றவராய் ஒரு சிலர் இருக்கலாம். அறியாமை இருளகற்ற தம்மையே தந்தவராயும் வேறு சிலர் இருக்கலாம். தாய் நாட்டின் பெருமைகாக்க தியாகம் பல செய்தவராயும் சிலர் இருக்கலாம். இத்தகைய சான்றோரெல்லாம் குன்றிலிட்ட விளக்கென நல்லிதயம் கொண்டோரிடை என்றும் ஒளியிடுவது உறுதி.

இங்ஙனம் புகழீட்டிய ஒரு சான்றோனின் வழிநடந்தாலே இத்தகைய தியாகியின் பாதை சென்றாலே செல்வோரெல்லாம் சிறப்புறுவர். இவர்களின் பாதையின் தொடக்கம் சிரமமாக இருக்கலாம். இடைவெளி கரடுமுரடாகவும் இருக்கலாம். ஆனால் முடிவோ அமைதி நிறைந்ததாவும், பெருமை தரக்கூடியதாகவும், வெற்றி நிறைந்ததாகவும் இருக்கும். காலையில் தோன்றும் கதிரவனை "எழு" என எவரும் கட்டளையிடுவதில்லை, அதன் தோற்றத்தை எவரும் மறைத்ததுமில்லை. சிலசமயங்களில் மேகங்கள் மறைக்கலாம். அதுவும்கூட தற்காலிகமானதே. வெகு விரைவில் மேகங்களை இழுத்து மீண்டும் தன் இடங்களைப் பூமியில் பாயும்படி செய்கின்றது. இது போன்றே நல்லாற்றல் கொண்ட இவ்வறிஞர்களை தொண்டாற்று எனக் கட்டளையிட்டவர் எவருமில்லை. அவர்கள் ஆற்றும் தொண்டிற்கு சில அறியாமை மேகங்கள் தடை போடலாம். ஆனால் அவை அகற்றப்படுகின்றன. அவர்களின் ஆற்றலின் கதிர்கள் வெளிப்படுகின்றன. இது போன்ற சான்றோர் வரிசையில், ஆற்றல்மிகு அறிஞர் கூட்டத்தில் முன்நிற்கின்றார். நமது அண்ணா எனக் கூறிப் பெருமையடைவதில், நம்மை விட உளம் உவப்படைவதில் வேறு எவரும் உளர் எனில் உறுதியாக இருக்கமாட்டார், பண்டு களிச் சிறப்பு மிக்க காஞ்சியில் இன்று கதிரவனைத் தோன்றியவரே நமது அண்ணன். பொதிகைத் தமிழ்த்தாயின் இனிமை மிக்க தலை மகன் அவர் எனில் இளவல்கள் நாம் என்பதை எண்ணும்பொழுது நம்மை விட சிறப்புக்கொண்டோர் வேறு எவருண்டு? அவரது சொல்லும் செயலும் துயிலுபவனுக்கு நற்தெம்பூட்டக் கூடியது. சோர்ந்தவனுக்கு ஊக்க மூட்டக்கூடியது, அவரது சொற்சுவையிலும், பொருட்சுவையிலும் கட்டுண்டுகிடக்கும் ஆயிரக்கணக்கான இளைஞர் கூட்டம் எதுநேரினும் உறுதியிழக்காதது. கட்டுப்பாடு மிக்கது, கொண்ட கொள்கையை செம்மையாக நடத்திச்செல்வது! அறிவு வேண்டுமா? அண்ணாவின் நூலைப்படி. உறுதி நெஞ்சம் வேண்டுமா? ஓர் முறை அவரது சொற்பொழிவைக் கேள் என மாற்றாரும் ஏற்றியுரைக்கும் வண்ணம் ஏற்றமிகு புகழ் கொண்டவர் நமது அண்ணன். அவரது நாவன்மையால் தமிழ் மீண்டும் தலை நிமிர்கின்றது, தமிழர்கள் உரம் பெறுகின்றார்கள் என்றால் அது மிகையாகாது.

"யாமறிந்த மொழிகளிலே
தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்."

என்று பாடிய பாரதி, இன்றிருப்பாரேயாகில், தமிழுக்கு தமிழர்க்கு, தமிழ்நாட்டிற்கு நமது அண்ணன் ஆற்றும் தொண்டு கண்டு—



அவரது வழி—

பெரியார் அவர்களிடம் ஆசிரியர்களாக இருந்தவர்கள் ஏராளமானவர்கள். தங்கப்பெருமாள்பிள்ளை, நகரதூதன் திருமலைசாமி, சாரநாதன், துடுப்பதிபண்டித முத்துசாமி, வெங்கடாசலம் இப்படிப்பட்டவர்கள் அண்ணா வருவதற்கு முன் இருந்தார்கள்.

அவர்கள் எல்லாம் தலையங்கம் எழுதுவதானாலும், எப்படிப்பட்ட கட்டுரைகள் செய்திகள் எழுதுவதென்பதை பெரியார் அவர்களிடம் கேட்டே போடவேண்டும். அப்படிதான் வழக்கமாக நடந்து வந்தது.

அந்த முறையை மாற்றி தானே எல்லாவற்றையும் செய்து வந்தார். இந்தமுறை தனக்குப்பின் வந்தவர்களுக்கும் பயன்பட்டது.

ஒருமுறை அண்ணா அவர்கள் ஒரு நாடகத்திற்கு ஒரு பக்கம் விமர்சனம் எழுதிவிட்டார். அது இழந்தகாதல்நாடகம். இதைப் பார்த்ததும் பெரியாருக்கு கோபம் வந்து விட்டது. உடனே அண்ணா அவர்களிடம் வாதிட்டார். இரவு 8மணிக்கு ஆரம்பித்த விவாதம் இரவு 2மணிக்கு முடிந்து அண்ணா அவர்கள் எழுதியது சரி என்று ஒப்புக் கொண்டார்.

—சங்கரையா

"யாமறிந்த அறிஞரிலே அண்ணா போன்று தமிழ் காப்போர் எவரும் காணேம் என்று உறுதியாகப்பாடியிருப்பார். தாய் பிறன் கைப்படச் சகிப்பவனாகி நாயென வாழ்வோன் நமரில் இங்குளனே?

என்பது பாரதியின் வாக்கு. தமிழ்த்தாய் இந்தியால் சாடப்படுகின்றாள். துடிக்கிறது அண்ணனின் நெஞ்சம். செல்லுகளம் நோக்கி! என தன் தம்பியருக்கெலாம் கட்டளையிடுகின்றார். மானம் காக்கச்செல்லும் படைக்கு அவரே தலைமை தாங்குகிறார். தலைவனுக்குச் சிறைக்கோட்டம். பின் சென்ற மறவருக்கும் அவ்வாறே தண்டனைகாலம் முடிகின்றது. சிறைக்கதவு திறக்கின்றது புது வெள்ளம் கண்ட உழவர் கூட்டம் போன்று எங்கும் மகிழ்ச்சி வெள்ளம். தமிழரின் மானம் காக்கச் சிறை சென்ற தங்கள் தலைவனை தமிழர் கூட்டமெல்லாம் ஒன்று கூடி வரவேற்ற அந்த நாளை நாளையவரலாறு கூறும்.


இத்தகைய தலைவருக்கு, அன்பு உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கும் அறிஞருக்கு, எல்லாவற்றிற்கும் மேலாக நமது அண்ணனுக்கு இன்றைய தினம் ஐம்பத்து ஆறுவது பிறந்த தினம் இன்று நமது துயரெல்லாம் மறக்கின்றோம்: நமது இல்லமெல்லாம் மகிழ்ச்சி. நல்லவர் உள்ளமெல்லாம் மகிழ்ச்சி. எங்கெல்லாம் அறிஞர் உளரோ, அங்கெல்லாம் பெரு மகிழ்ச்சி!


வாழ்க இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற என் தலைவர் அண்ணா!


ஓங்குக என் கழகத்தின் புகழ்! வெல்க என் இன்பத் தமிழ்!

—: o :—

அண்ணல் தென்னாட்டுக் காந்தி








மக்களை வயப்படுத்தும் மோண்பு
மதுவை எதிர்க்கும் சீலம்
காந்தீய நிர்மாணத் திட்டம் 25
1000 கோடி திட்டம்
ஏழைக்காகத் திட்டமிடும் திறன்

தென்னகக் காந்தி வாழியரே!



கவிஞர் வாணிதாசன்


சீர்மேவு காஞ்சித் திருமகன் அண்ணு ! செழுந்தமிழைப்
பார்மேவு மக்கள் மனதில் விளக்கிப் பசுமரம்சேர்
கூர்மே(வு) ஆணியெனக் கூறும் திறத்தோன் !
குளிர்விழியோன்!
நீர்மேவு நீள்கடல் போல நிலைத்(து)அண்ணு வாழியரே !

தேன்மிகு செஞ்சொல் திறத்தால் திசைமாறும் செந்தமிழர்
கூன்மிகு நெஞ்சைக் கொடுமை அரசைக் குடிகெடுக்கத்
தான்வளர் நாட்டில் தலைநிமிர் இந்தியைத் தட்டியோட்ட
வான்எழு ஞாயிருய் வந்தார் எம(து)அண்ணு வாழியரே!

மக்கள் துயரும் மடமை அறிவையும் மாய்ப்பதுவே
மக்கள் பிறவியை வாய்த்தவர் கைக்கொள் அறச்செயலாம்!
மக்கள் அறிவை வளத்தை அரசைத் திருத்திடுவோன்
மக்கள் தலைவன்எம் அண்ணு ! மலைபோல வாழியரே !

சூழும் அலைகடல் முப்புறம் சூழ்ந்திடு தென்னகத்து
வாழ்வை அரசை வளஞ்செய் மலையிடை வந்துதித்த
ஆழ்கடல் ஞாயிரும் அண்ணு ! தமிழர் தனித்தலைவன் !
ஏழெட் டகவையை எட்டினன் வாழியர் ! வாழியரே !

உலையில் கொதிக்கும் உணவாம் அரிசிநல் காய்கறிகள்
விலையை எதிர்த்துச் சிறையில் இருந்தே வெளிவந்தோன் !
கலையை வளர்த்தே தமிழை வளர்க்கும் கருத்துடையோன்!
மலையில் பிறந்த மருந்தாம் எம(து)அண்ணு ! வாழியரே !



சந்தில் மறைந்தும் பசுந்தோல் அணிந்தும் தமிழ்ஒழிக்கப்
பொந்துப் புலியாம் புகவரும் இந்திப் புணர்மொழியை
எந்தத் திசையில் வரினும் எதிர்த்துச் சிறைபுகுந்து
வந்தவர் அண்ணு ! அறிஞர் ! வளத்துடன் வாழியரே !

மக்கள் மனத்துள் படிந்த பழமையாம் மாசுகளைச்
செக்கச் சிவந்தநற் செந்தேன் மொழியால் செவியுறுத்திச்
சிக்கல் அவிழ்க்கும் திறத்தோன்! திசைகளாம் நாலிரண்டுத்
திக்கில் புகழைப் பரப்பிச் சிறப்புடன் வாழியரே !

என்றும் அரசியல் ஏற்றம் அடைந்தால் இனிமைமிகும் !
நன்றே அரசியல் நாட்டிட வேண்டும் நலம்பெருகும் !
என்றே அமைச்சை அரசை அணுகி அறிவுரையாம்
பொன்றும் புதுமைக் கருத்தைப் புகல்அண்ணு ! வாழியரே !

உறங்கும் புலியாம் தமிழகம் வாழும் உடன்பிறப்பைக்
கறங்கும் முரசெனக் கற்றவர் கல்லார் மனம்பதிய
அறங்களைக் கூறி அரசியல் கூறி அறிவுறுத்தும்
திறஞ்சேர் நம(து) அண்ணு செந்தமிழ் ! வாழியர் !
வாழியரே !

முப்பால் முழுதும் படிக்கத் தமிழர் முனைந்துவிடில்
தப்பா(து) அறமும் அரசும் வளமும் தழைத்திருக்கும் !
எப்பார் உலகும் இனிக்கும் திருக்குறள் வள்ளுவரை
ஒப்பார் அறிஞர் நம(து)அண்ணு ! ஒப்பாராம்! வாழியரே !

புன்நகைத் தீஞ்சொல் புதுமை எழுத்தால் புதுக்கருத்தை
நன்நிலை மக்கள் அடைந்திட நாடு வளம்கொழிக்கத்
தென்னக வால்டர் அறிஞராம் அண்ணு!நல் கீர்த்தியுடன்
இந்நாள் ஆண்(டு) ஐம்பதும் ஆறும் அடைந்தனர்
வாழியரே !

மக்கள் பிறவியில் வாழ்ந்த கறுப்பர் வளமையெலாம்
திக்குத் தெரியாத் திசையினர் உண்டுத் திளைத்திருக்க
மக்கள் அடிமையை மாய்த்தவர் மாப்புகழ் லிங்கனும்!தென்
மக்கள் உளம்நிறை லிங்கனும் என்அண்ணு ! வாழியரே !

அன்பால் அறிவால்அறத்தால் நமைஆண்ட வெள்ளையரின்
துன்பச் செயலை அடிமைத் துயரைத் துணிந்திடித்த
இன்ப முகத்தோன் எளிமை உடையோன்நம் காந்தியைப்
போல்
தென்னக காந்தியாம் அண்ணு ! சிறப்புடன் வாழியரே !

ஏழைப் பெருங்குடி மக்கள் உழைப்பை இருட்டடித்துப்
பேழை நிரப்பும் பெருத்தனக் காரர் பிழைதிருத்தி
வாழ வழியை வகுத்துத் தமிழகம் வாழவைப்போன் !
வாழிய அண்ணு ! அவர்வழித் தம்பிகள் வாழியரே ! !



தமிழ்க்காப்புப் பணியில் ஈடுபட்டுத் தமிழகமெங்கும் மக்களைத்தட்டியெழுப்பிவரும் 'முரசொலி' இதழ், பார்புகழ் அறிஞர் அண்ணாவின் 56 ஆம் பிறந்த நாளைக் கொண்டாடுவதற்குச் சிறப்புமலர் வெளியிட இருக்கும் செய்தி கேட்டுச் சிந்தை மிக மகிழ்ந்தேன்.

அறிஞர் அண்ணா அவர்கள் இன்று தமிழ் காக்கும் தனிப் பெருந் தலைவராக விளங்கி வருகின்றார்கள். இந்தியப் பெருந் தலைவராக—உலகப் பெருந்தலைவராக விளங்கப் போகும் காலம் விரைவில் வந்துகொண்டிருக்கின்றது.

மக்கள் உளங்களைவன்மை யாகப் பிணித்துத் தன்பால் ஈர்க்கும் தனிப்பெருந் தலைவர் அறிஞர் அண்ணா.

"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்"

எனும் திருவள்ளுவர் செம்மொழிக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குபவர் அறிஞர் அண்ணா அவர்களே.

நம் அன்னைத் தமிழ், தொன்மையும், வன்மையும், தூய்மையும், இனிமையும் பொருந்தியதுதான். ஆயினும் தமிழ்மக்களே தமிழின் இத்தகைய பெருமைகளை உணராது இருந்தனர்.



'தமிழ்' என்பது தமிழ்ப்புலவர்கட்கு மட்டும் உரிய தனி உடைமை எனக் கருதப் பட்டு வந்தது. அந்நிலையை மாற்றித் 'தமிழ்' யாவர்க்கும் உரியது என ஆக்கி, இனிய தமிழில் பேசுதலையும் எழுதுதலையும் நாகரிகப் பெருவழக்காக நாட்டில் நிலைநாட்டிய பெருமை அறிஞர் அண்ணா அவர்களையே சாரும்.

இன்குரல் பெற்றுள்ள இசை மகள் ஒருத்தி இனிய தமிழில் பாடுங்கால் கேட்டு மெய் மறந்திருப்பது போல், தமிழ்ச் சொற் பொழிவைக் கேட்டுச் செயல் மறந்து நிற்கும் நிலையை உண்டாக்கிய கீர்த்தி அறிஞர் அண்ணாவுக்கே உரியது.

அறிஞர் அண்ணா அவர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் நாவீறு படைத்துள்ள பெரு நாவலர்; செஞ்சொற்கொண்டல். எவரையும் தம்போக்கு ஆட்படுத்தும் பேரு மன்னர்; பிறவிநடிகர்; ஆராய்ச்சி அறிஞர்; அன்புக் குரிசில். மக்களாட்சியின் மாண்புறு காவலர்.

இன்று பாரதப் பெருங்கண்டத்தில் ஒருமைப்பாட்டின் பேரால் அஞ்சத்தக்க சூழ்நிலை ஒன்று உருவாகி வருகின்றது. "ஒற்றுமைக்கு வழி, ஒரே நாடு. ஒரே மொழி" என்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு, பரதகண்டத்தில் உள்ளோர் அனைவரும் இந்திமொழி ஒன்றையே தேசிய மொழியாக



டாக்டர் இலக்குவனார்

JAYA

ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற திட்டமிட்டு வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் இந்தி மொழியை ஏனையமொழியாளர் மீது, சுமத்திவரும் செயல் விரைந்து நடைபெற்று வருகின்றது இன்னும் சில ஆண்டுகளுக்குள் இந்திமொழியே எல்லாத் துறைகளிலும் ஆட்சி பெற்று விடும்.

இதனோடு அமையாது 'எல்லா மொழிகட்கும் ஒரே எழுத்து' என்ற பெயரால் இந்திமொழி எழுத்தாம் தேவநாகரியை இங்கு வழங்கும் அனைத்துமொழிகட்கும் உரித்தாக்கவும் திட்டமிட்டுச் செயல்புரிந்து வருகின்றனர்.

ஆகவே, ஒருகால் நூற்றாண்டுக்குள் இந்திமொழி தவிர்த்த ஏனைய மொழிகள் உருவிழந்து மறைந் தொழிவது உறுதி. மொழியை இழந்த பின்னர் விழியை இழந்தவர்களாவோம்; விழியிழந்தபின் வாழ்வேது?

இக்கொடுமையினின்று தப்புவதற்கு வளர்ந்தோங்கி வரும் இந்தி முதன்மையைத் தடுத்தாக வேண்டும். இம்மாபெரும்தடுப்புப் பணியில் அறிஞர் அண்ணா அவர்கள் முனைந்து நிற்கின்றார்கள். அவர் தலைமையில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் அமைதியான அறப் போரில் ஈடுபட்டுத் தாய் மொழிக்காக அல்லல்பட்டு வருகின்றனர். இந்தி முதன்மைத் தடுப்பு; இந்தி ஒழிந்த எல்லா மாநிலத்திற்கும் உரியது; எல்லா மக்களும் தம் வேறுபாடுகளை மறந்து ஒன்றுபடல் வேண்டும்.

மறைந்த மாமணி நேருவைப் போல் தென்னகமக்களின் உள்ளங் கொள்ளைகொண்ட ஒரே தலைவராக விளங்குபவர் அறிஞர் அண்ணா அவர்களே! ஏனைய மாநிலத்தவரும் அறிஞர் அண்ணாவின் தலைமையில் அணிவகுத்துநிற்கும் காலம் வரப்போகின்றது. இந்தி மொழித் தனியாட்சி அப்பொழுதுதான் தன் இரும்புப் பிடியைத் தளர்த்தித் தன்னிடத்திற்குச் செல்லும்.


எல்லாமொழிகளும் இடையூறின்றி வளரவும் எல்லா மாநிலத்தவரும் உரிமையோடும் ஒற்றுமையுடன் வாழவும், எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற பெருமிதஉணர்வு தோன்றவும், இந்தி முதன்மை அகற்றப்பட வேண்டும். இப்பணியில் ஈடுபட்டுள்ள அறிஞர் அண்ணா அவர்கள் பல்லாண்டு வாழ்வார்களாக. பரதகண்டப் பெருந்தலைவராக, உலகப் பெரியாராக மக்கள் அனைவராலும் போற்றப்படும் நிலையை விரைவில் பெறுவாராக. இன்னும் ஐம்பத்தைந்து ஆண்டு இனிதே வாழ்க.

வாழ்க அண்ணா! வளர்க தமிழ்மொழி
இந்தி முதன்மைஎளிதே நீங்கி
எல்லா மொழிகளும் இனிதே வாழ்க.
அடிமை நீங்கி, மிடிமை ஒழிந்து
ஒன்றுபடுவோம் உள்ளத்தால்
நன்றே வாழ்வோம் நலம்பல பெற்றே!

"G. R. C." RADIOS

"ஜீ. ஆர். சி." வானொலி

மாடல் எண். 434-4 வால்வு-3 பேண்டு



விலை ரூ. 165/-

ஈர்க்கும் கருவி அழகில் சிறந்தது

(ஒரு வருட உத்திரவாதம் வழங்கப்படும்.)

சிறியோர் — பெரியோர் — ஏழை — எளியோர் வாங்க வசதி வாய்ந்த வகையில் ரூ. 150/- விலையிலிருந்து பல மாடல்களில் கிடைக்கும்.

நல்ல உழைப்பு — இனிமையான குரலோசை தரக்கூடியது G. R. C. ரேடியோ.

: கிடைக்குமிடம் :

கிரீன் ரேடியோ கம்பெனி


(தொலைபேசி எண் : 84680)

மவுண்ட் ரோடு, (வெலிங்டன் சினிமா எதிரில்) சென்னை-2.

குறிப்பு :—தனி தகுதி பெற்ற எமது சர்வீசு செக்ஷனில் உங்களது ரேடியோ எதுவாயினும் பழுது பார்க்கப்படும்.

அண்ணை ஐம்பத்தாறு

~கவிஞர் ஆனந்தம்~




கட்டி முடித்த கனமுட்டும் மாளிகையும்
எட்டுத் திசையறிய ஏற்றமிகு நற்புகழும்,
கொட்டிவைத்த செல்வமும், குன்றுத செல்வமும்
விட்டு விட்டுச் சென்றார்! வெளிவாயிற்காவலனே-
தீமைசெய் உட்பகையைத் திட்டமிட்டுத் தேய்த்த பின்

ஊமையர் நாட்டில் உளறுவாய் மன்னன் போல
தக்க தருணத்தில் தானே தலைவனென்றான்!!
பக்கமே எங்கொட்டிப், பல்லக்குத் தூக்கிவரக்
குற்றத்தில் வாழும் குணக்கேடர் முந்துகிறார்!
இற்றை நிலைமை எவர்க்கும் புரியாதோ? 10

ஆளாக்கி விட்டவரே தூளாக்க எண்ணினார்;
மாளாத் துயரமுடன் வாளா வெளியேறிக்
சொல்லே கடைக்காலாய் நல்லதோர் உள்ளத்தால்
எல்லாரும் கொண்டாடும் ஏழை அரண்மனையை
என்றும் உடனிருக்கும் நன்றியுள்ள தம்பிமார்
ஒன்றுய் உருவாக்க; ஓங்கு புகழண்ணல்
புத்தம் புதியதை இத்துணை மேன்மையுடன்
வைத்திருக்கக் கண்டால் வயிறும் எரியாதோ? 81


ஏச்சும், இழிமொழியும் எள்ளிநகை யாடலும்,
கூச்சல், குழப்பமும், கோள்மூட்டல், கிண்டலும்,
சிண்டு முடிதலும், சிக்கலை உண்டாக்கிப்
பண்டைய நண்பர்போல் பாசாங்கு பேசுவதும்,
கற்கண்டுச் சொல்லில் கடுநஞ்சு பூசுவதும்,



சொற்கண்டு, 'யாரேனும் சோர்வடையமாட்டாரோ'
என்றுசில கீழ்மக்கள் ஈனச் செயல்புரிய
இன்று முனைந்துள்ளார்! இஃதும் தெரியாதோ ? 26

உற்றுர்யார் ? ஒன்றுமெதிர் பாராத உள்ளத்தைப்
பெற்றுர்யார் ? நாட்டுநலம் பேணிச், சுயநலத்தைச்
சற்றும் நினையாத சன்மார்க்கத் தொண்டர்யார் ?
சுற்றி வரும்பகையைத் தூசாக எண்ணிடும்
திண்மை உடையோர்யார் ? சிந்தித்துச் செய்கின்ற
உண்மை நெறியினில் ஊர்மெச்சப் பாடுபடும்
மெய்யொழுக்கம் பூண்டோர்யார் ? மேனி வளர்த்திடப்
பொய்யுண்ணும் போலியார் ? பொல்லார்யார் என்றே
செறுபகையை வெல்லும் குறுநகை யாளன்,
ஒருமுறை பார்த்தால் உறுவதறி யாரோ ? 36

நிலகுல யாத மலையின் உயர்ந்தோன்;
அலைபுரள் கடலின் அகன்ற இதயத்தோன்;
இன்னுசெய் தாரையும் மன்னிக்கும் பண்பினன்;
எந்நாளும் சென்றுரை ஏற்கும் பரிவாளன்;
யாங்கள் மனம்விரும்ப ஈர்த்த ஒரேதலைவன்;
ஈங்கெமக்கு யாவுமாய், இன்ப வழிகாட்டி,
மாண்ட தமிழ்க்கனல ஆண்டிரு பத்தைந்தாய்
மூண்டெரியச் செய்த மூதறிஞன்: தீதில்லா
நல்வாழ்வு நல்கவல்ல நம்பிக்கைப் பேரொளி;
செல்காலங் கண்டதால் சீராய் வருங்காலம்
செப்பனிடவந்த சிற்பி;நம் சிந்தையில்
எப்பொழுதும் தங்கியே, இப்படை தான்நடத்திக்-
காட்டிக்கொடுக்கும் கயவர் திறனழிய,
மாட்ட நினைக்கும் மனமற்றுர் கண்திறக்க,
நேர்நின் றெதிர்க்கும் நெறியற்றுர், பின்புறம்
போர்நிகழ்த்தப் பார்க்கும் புல்லர் புறம்ஓட—
வீர முழக்கமிட்டு, வெற்றி பெறும்வரை
வேறுசிந்தை இல்லாத வேங்கை! அடலேறு!!
"வாழ்கநம் அண்ண"னென வாழ்த்துக, தென்னுடே;
சூழ்க சுகம்யாவும் என்று ! 56



பாராளுமன்றத்தில் முதல் முழக்கம்...

இந்தியில் 'ராஜ்ய சபா' என்று அழைக்கப்படும் மாநிலங்களவையில் அண்ணாதுரை தமது கன்னிச் சொற்பொழிவை நிகழ்த்த 1-5-63ஆம் நாளில் எழுந்தார்.

பத்திரிகைக் காலரியிலும், பொதுமக்களின் காலரியிலும் அமர்ந்திருந்த எல்லாக் கண்களையும் கவரும் பொருளாக அவர் இருந்தார்.

ஏனெனில்-இந்த மனிதர்தான் தமிழக மாநிலத்தில் காங்கிரஸ் கட்சிக்கு அதிர்ச்சியைத் தந்தவர் என்று அவர்கள் கேள்விப் பட்டிருந்தார்கள்.

தமிழகத்துப் பொதுமக்களின் கண்ணின் மணியாக அவர் இருக்கிறார் என்றும், இதையெல்லாம் விட-பிரிவினைக் கொடியுயர்த்தி முழக்கமிடும் துணிச்சல் வாய்ந்த மனிதர் என்றும் அவர்கள் அறிந்திருந்ததால் அமைதியாக அமர்ந்து கூர்ந்து கவனித்தார்கள்.

தமிழில் பேசுவதுபோல் அவ்வளவு நன்றாக ஆங்கிலத்தில் அவரால் பேசமுடியுமா? இந்த ஐயத்திற்கு விடையாக-அவைத் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன்-கேள்வி நேரத்திற்குப் பிறகு அவையில் இருந்தார். கேள்விகள் முடிந்தவுடனேயே அவர்-தமது இருக்கையை துணைத்தலைவருக்குத் தந்துவிட்டு வெளியேறுவது வழக்கம்.


ஆனால், அனைவரும் அண்ணா இன்று பேசுவதை நிறைந்த ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தனர்.

தமது பெயர் அவைத் தலைவரால் அழைக்கப்பட்டவுடன், அவர் (அண்ணாதுரை) எழுந்தார்.

நல்ல தேகக்கட்டும்-எளிய வேட்டி-சட்டை-அங்கவஸ்திரமும் அணிந்த அவர்-தோற்றத்தில் மனங்கவரும் வகையில் இல்லை. எனினும், இலட்சோப இலட்ச தமிழ் மக்கள் இந்த ஆடம்பரமற்ற உருவத்தின் பின்னால் இருக்கிறார்கள் என்பதையும் அவர் எங்கு இட்டுச் சென்றாலும் அவரது பின் மக்கள் கூட்டம் செல்வதற்குத் தயாராக உள்ளது என்பதையும் அறிகிற நேரத்தில் மனங்கவரும் தோற்றம் அவருக்கிருந்தது.

நண்பர்களுக்கு நம்பிக்கையூட்டி சந்தேகப் பிராணிகளுக்கும் குறை கூறுவோருக்கு இருந்த நம்பிக்கையை இழக்கச் செய்து தமது பேச்சின் மூலம் அண்ணாதுரை எழுந்துயர்ந்தார்.

பேராசிரியர் ரத்னசாமி எம். பி.



அவரிடம் மக்கள் மந்தை ஒரு விஷயத்தில் ஏமாற்றம் அடைந்தார்கள். மக்கள் தலைவர்கள் பாராளுமன்றத்தில் செய்வது [illegible] இவரும் தீப்பொறி பறக்கும் பேச்சைப் பேசுவார்; உரக்கக் கூச்சலிடுவார்; ஜம்பப் பேச்சு பேசுவார் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள்.

அவரது பேச்சு - சொற்போர் வீரனின் பேச்சாக இருந்தது; காரணத்தோடும், புள்ளிவிவரங்களோடும் அவர் வாதாடினார். அவரது குறிக்கோளுக்காக எதிரிகளின் பேச்சிலுள்ள மேற்கோள்களைக் காட்டினார்.

கேட்போரின் உன் மனதிற்கு அவர் வேண்டுகோள் விடுத்தாரே தவிர - அவர்களது உணர்ச்சிக் கொந்தளிப்புக் கல்ல!

தவறுகளில்லாத ஆங்கிலத்தில் - அடிக்கடி குறிப்பைப் பார்க்காமல் - பணிவோடு, விஷயத்தை விளக்கினார். தனது திராவிட நாட்டு விடுதலை கோரிக்கைக்கு எதிரிடையான வாதங்களுடன் போரிட்டார்.

மானிலங்களிடையே நேசப் பான்மையும் அமைதியும் நிலவ வேண்டும் என்பதற்காக - பொருளாதார - தொழில் வளர்ச்சி தென்னகத்தில் வேகமாக உருப் பெற வேண்டும் என்பதற்காக - வடக்கிற்கும் தெற்கிற்குமான அரசியல் சம நிலை ஏற்படுத்துவதற்காக - இந்தியாவின் நிச்சயமான - உறுதியான பாதுகாப்பிற் காகவும் அவர் தமது வழக்கை முன் வைத்தார்.

அதற்காக அவர் நல்ல முறையில் காரணங்களை எடுத்துவைத்தார்; வாதாடினார்; சொற் போரிட்டார் - கோபமில்லாமல்; குரோதமில்லாமல்!

ஏனெனில், அவரது மூலக் கொள்கையை ஒப்புக் கொண்ட மக்கள் கூட்டத்தில் அவர் பேச வில்லை.

ஆயினும், அவரது பேச்சு கவனத்துடன் கேட்கப்பட்டது; மரியாதையுடன் கேட்கப் பட்டது; அப்போது ஒரு குறுக் கீடு கூட வரவில்லை. பேச்சு பற்றிய விமர்சனம் பின்னர்தான் வந்தது.

ஒரு மணி நேரப் பேச்சுக்குப் பின்னர் அவர் அமர்ந்தபோது, நீண்ட கரவொலி எழுந்தது. வேறெந்த கன்னிச் சொற்பொழிவுக்கும் இவ்விதம் நிகழ்ந்ததில்லை.

பேசியவரும் - பேச்சைக் கேட்டவர்களும் அந்த நிகழ்ச்சியில் மதிப்பு மிக்க மக்களாய்த் திகழ்ந்தனர். பாராளுமன்றத்திலேயே அன்று ஒரு பெருநாள்!

சட்ட மன்ற உறுப்பினர்களின் தாழ்வாரத்திலும், அத்தாணி மண்டபத்திலும், பத்திரிகை யுலகிலும் இவரது பேச்சின் பொருள் பற்றியே - பாங்கு பற்றியே விமர்சித்தார்கள்.

அது ஒரு பெரிய பாராளுமன்ற நிகழ்ச்சி தான்!

அண்ணாவின் நகைச்சுவை

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. எங்கள் வீட்டில் 10 ரூபாய்க்கு அரிசி வாங்கி நடைபாதையிலும் இரண்டு மூன்று கூடைகளிலும் கொட்டியிருப்பார்கள்.

இப்போது 10 ரூபாய்க்கு அரிசி வாங்கினால் பெட்டியில் வைத்து பூட்டலாம் போலிருக்கிறது.

* * *

நம்மில் ஒருவரை கல்யாண வீட்டுக்கு அழைத்துச் சென்று சாப்பிடச் சொன்னால் சிறிது சாப்பிட்டுவிட்டு 'வயிறு கொள்ளவில்லை' என்று கூறுவதைக் கேட்டிருக்கிறோம். ஏன்—

பட்டினி கிடந்து கிடந்து வயிறு சுருங்கிவிட்டது!